பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 23 ஞாயிற்றுக்கிழமை 07.05.2023 கதிர் 178

### இது ரகசியம் அல்ல!

தெற்கில் உள்ளூர் கடன்சீரமைப்புத் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் எழுந்துவரும் நிலையில் மீண்டும் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தைக் கையில் எடுத்திருக்கிறார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கை இரண்டு வகைகளில் கடன் வாங்கியிருக்கின்றது. வெளிநாடுகள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒரு வகை, உள்ளூரிலேயே வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் இன்னொரு வகை. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இந்தக் கடன்களை மறுசீரமைப்புச் செய்யவேண்டி இருக்கின்றது. அதாவது இந்தக் கடன்களில் ஒரு பகுதியை இல்லாமல் செய்வது மற்றும் கடனை மீளச் செலுத்தும் 2

## அளம்பிலில் படையினர் வசமுள்ள

# துயிலுமில்லக் காணியை மீட்க பட்டினி போராட்டம்

### 3 மாவீரர்களின் பெற்றோர் அறிவிப்பு

முல்லைத்தீவு, மே 07

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் பிடியில் உள்ள காணியை விடுவிக்கக் கோரி பெற்றோர்கள் மூவர் இன்று முதல் தொடர் பட்டினிப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணியை விடுவிக்குமாறு கோரியே இந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணி தற்போது படையினர் வசம் உள்ளது. அதனை விடுவித்துத்தருமாறு வலியுறுத்தியுள்ள மூன்று மாவீரர்களின் பெற்றோர்கள், அரசியல் தலைமைகள் அதிகாரிகள் மிக விரைவில் தமக்குரிய தீர்வை பெற்றுத் தருமாறும் வலியுறுத்தியுள்ளனர். தவறும் பட்சத்தில் தாம் சாகும் வரை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபடபோகிறார்கள் எனவும் அறிவித்துள்ளனர். 2

## வங்கக்கடலில் தாழமுக்கம் மே 09, 10 சூறாவளி வீசலாம்

(ந.லோகதயாளன்)

இலங்கைக்கு அண்மையில் தற்போது காணப்படுகின்ற காற்று சுழற்சிக்கு மேலதிகமாக இலங்கைக்கும் அந்தமானுக்கும் இடையே, தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் புதிதாக உருவாகியுள்ள காற்று சுழற்சியும் ஒன்றிணைந்து இன்று காற்றமுத்த தாழ்வு நிலையாக வலுவடையும்.

இது மே 8 நன்கமைந்த தாழமுக்கப் பகுதியாக வலுவடைந்து மே 09,10 சூறாவளியாக வலுவடையக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. மீனவசமூகம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதுடன் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பதும் மிக நல்லது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பருவ நிலை காரணமாக வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு 2

### நாட்டை அழித்த மொட்டின் ஆட்சியில்

## கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் வெளிப்படையாக இருக்கவேண்டும்

### அப்வுகாமி எம்.பி. வலியுறுத்து

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்தார்.

நீர்கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சியாளர்கள்தான் நாட்டினை முற்றாக அழித்தவர்கள். அவர்கள்தான் மொட்டுக்கட்சியாக உருவெடுத்து நாட்டை அழிப் பதற்கு காரணமாக இருந்தார்கள். ஆகவே அவர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் கொண்டுவரப்படும் திட்டம் வெளிப்படைத் 2

## சரியான தலைமைத்துவம் இன்றி ஊழலைக் கட்டுப்படுத்தமுடியாது

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. தெரிவிப்பு

ஊழல் அரசியல்வாதிகளை கட்டுப்படுத்தும் தலைமைத்துவம் கிடைக்காதவரையில் ஊழல் மோசடிகளை தடுப்பதற்காக எவ்விதமான சட்டங்களைக் கொண்டு வந்தும் பயனில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் உள்ள அலுவலகத்தில் சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஊழல் தடுப்புச் சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது. ஆனால் இந்தச் 2



## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து வைத்திருப்பதே ஆட்சியாளர்களின் எண்ணம்

### சட்டத்தரணி தவராசா விளக்கம்

(ந.லோகதயாளன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து வைத்திருக்கும் மனோநிலையே புதிய சட்டமூல உருவாக்கத்தில் உள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி கே வி தவராசா தெரிவித்தார்.

யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற உழைக்கும் மகளிர் அமைப்பின் மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத சட்டம் அதைக் காட்டிலும் மோசமான சட்ட மூலமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் காணப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சுதந்திரமாக ஒரு 2



## நாட்டை படுகுழிக்குள் தள்ளிய விக்கிரமசிங்க திறமையானவரா?

### தேசிய மக்கள் சக்தி கேள்வி

நாட்டைப் படுகுழிக்குள் தள்ளியவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்பதை மறந்து அவரை திறமையானவர் என்று கூறி, இருப்பதையும் இழந்துவிடவேண்டாம் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் காலி மாவட்ட அலுவலகத்தில் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான நளின் ஹேவாகே சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் 2022ஆம் ஆண்டு மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டது. இக்காலப்பகுதியில் 7.8 சதவீதத்தினால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. விவசாயம் 6.6 சதவீதத்தினால் சரிந்துள்ளது. கைத்தொழில் 16 சதவீதத்தினால் சரிந்துள்ளன. 2

### வடக்கு – கிழக்கைத் தனித்தனியாகக் கையாளும்

## ரணிலின் தந்திரத்துக்கு பலியாகிவிடவேண்டாம்

### தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள்



இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பேன் என்று கூறிவருகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். முதற்கட்டமாகத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மே 09 பேசவுள்ள ஜனாதிபதி, மே 11, 12, 13 மூன்று நாட்களும் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பையும் விடுத்திருக்கிறார். 2

## வெடுக்குநாறிமலை ஆலயம் குறித்து சரத்வீரசேகர எம்.பி மேன்முறையீடு

### ஆலய நிர்வாகிகளிடம் அவரே நேரில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

வெடுக்குநாறி ஆதிலிங்க ஆலயத்துக்கு நேற்று திடீரென வருகைதந்த பௌத்த சிங்கள கடும்போக்குவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கத்தை மீள வைக்கும்படி வவுனியா நீதிமன்றம் வழங்கிய கட்டளையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதிக்கு சனிக்கிழமை வருகை தந்த சரத்வீரசேகர ஆலய நிர்வாகத்தினரிடம் பல விடயங்கள் தொடர்பில் கடும் தொணியில் பேசினார். அப்போதே இதனையும் அவர் தெரிவவித்தார்.

வெடுக்குநாறிமலைக்குச் செல்லும் வழக்கமான பாதைகளைத் தவிர்த்து புதிய காட்டு-வழிப் பாதையூடாக உழவு இயந்திரத்தில் முன்னாள் அமைச்சரும் அவரது ஆதரவாளர்கள் பலரும் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர். அவர்களுடன் பொலிஸாரும் அங்கு வருகை தந்தனர். அந்தச் சமயத்தில் ஆலய நிர்வாகத்தினர் ஆலயத்தில் பொங்கல் செய்து கொண்டிருந்தனர்.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் தங்குவதற்காக அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த 2

## கிழக்கு எம்.பிக்களையும் அழைக்காவிட்டால் ஜனாதிபதியின் கூட்டத்துக்குப் போவதில்லை

### ஜனநாயகக் கூட்டணி நேற்று முடிவு



கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்கவில்லை என்றால் ஜனாதிபதியுடனான சந்திப்புக்குச் செல்வதில்லை என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களின் கூட்டம் சனிக்கிழமைமாலையாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், என். ஶ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இரா துரைரட்ணம், பா.கஜதீபன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் செயலாளர் துளசி புளொட் அமைப்பின் சிரேஷ்ட 2

## தெளிவூட்டல் மாத இறுதிக்குள்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான தெளிவூட்டல் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் சனிக் கிழமை நடைபெற்ற சமய வழிபாடுகளை அடுத்து செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பின் போது, நிதிநிறுவனங்களுக்கோ, அரச நிறுவனங்களுக்கோ நெருக்கடியான நிலைமைகள் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை என்பதே தெளிவான நிலைப்பாடாகும். இதனை நாம் சர்வதேச நாணய நிதியத்திடமும் கூறியுள்ளோம். 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காலப் பகுதியை மேலும் நீடிப்பது, வட்டியைக் குறைப்பது போன் நடவடிக்கைகள் கடன் மறுசீரமைப்பில் உள்ளடங்குகின்றன. நாடு ஒவ்வொரு தவணைக்கும் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ள கடன் தொகையைக் குறைப்பதன் மூலம் அதந்தப் பணத்தை வர்த்தகத்திற்கும்பொருளாதார மீட்சிக்கும் செலவிட முடியும் என்பதே எதிர்பார்ப்பு.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் முதலில் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைத்துவிட்டு வாருங்கள் வெளிக் கடன்களை மீண்டும் மறுசிரமைக்கலாம் என்று கடன்கொடுத்த வெளி நாடுகளும் நிதி நிறுவனங்களும் கூறிவிட்டன. இந்த மாதத்திற்குள் அந்தக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இலங்கை ஆட்சியாளர்கள் உள்நாட்டில் வங்கிகளிடம்இருந்துகடனைப் பெற்றுள்ளார்கள். அதுபோக ஊழியர்சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிடம் இருந்தும் கடன் பெறப்பட்டுள்ளது. இவற்றை மறுசீரமைக்கும் போது வங்கிகள் மோசமான பாதிபப்பை ஏற்படுத்தும். குறிப்பாக சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதியம் என்பவற்றிலிருந்து பெருமளவு நிதியை ஆட்சியாளர்கள் பெற்றுள்ளதால், கடன்மறுசீரமைப்பில் அந்த நிதியெல்லாம் இல்லாமலாகிவிடுமோ என்கிற அச்சம் எழத் தொடங்கியிருக்கிறது.

இந்தப்பிரச்சினைதென்னிலங்கையில் பெரும் பூதாகாரமாக வளர்ந்து வரும் நிலையில், தமிழர்களுடன் பேச்சு நடத்த ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கிறார். இப்படி சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையைத்திசைதிருப்ப வேறொரு பிரச்சினையைக் கிளப்பிவிடும் கலை ரணிலுக்குக் கைவந்தது.

இந்தப் பின்னணியில் தான் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் மே 11, 12, 13 மூன்று தினங்கள் ஜனாதிபதி சந்திப்புக்கு அழைக்கின்றார் என்று அவரது மேலதிக இணைப்புச்செயலாளர் இளங்கோவன் அறிவித்திருகிறார்.

ஆனால், அதற்கு முன்னதாக பழைய தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுத் தலைவர் சந்தித்துப் பேசுவதற்கான அழைப்பும் விடுக்கப் பட்டிருக்கிறது. மே 9 இந்தச் சந்திப்பு நடக்க இருக்கின்றது. ஆனால் இந்த அழைப்பு அரசுத் தலைவர் செயலகத்தால் விடுக்கப்படவில்லை. பதிலாக ரெலோ, புளொட் தலைவர்களுக்கு தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவரான நடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே குறுந்தகவல் மூலம்தெரியப்படுத்தியுள்ளார். அந்தச்சந்திப்புக்கு முன்னதாக மே8கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் ஒரு சந்திப்பு நடக்க இருப்பதாகவும் சுமந்திரன் ஏனைய கட்சித்தலைவருக்கு அறிவித்துள்ளார்.

இந்த அழைப்புத் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதாகக்காட்டிக்கொள்ளும் இந்தக் கட்சித் தலைவர்கள் அதற்கு முன்னதாக அவசர அவசரமாக நேற்று யாழ்ப்பாணத்தில்கூடி அரசுத் தலைவரின் சந்திப்புத் தொடர்பில் கலந்துபேசி முடிவெடுத்து வைத்திருக்கிறார்கள். இதில் ரெலோ மற்றும் புளொட் தலைவர்கள் நாளைய கூட்டத் தில் அனேகமாகப் பங்கேற்க மாட்டார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தாமே கூட்டமைப்பு என்று உரிமை கோரி வரும் நிலையில் இனி சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவில்செயற்படுவதிலிருந்து அவர்கள் வெளியேறுவார்கள் என்று தெரிகிறது. இதனால் நாளைய சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்தச் சந்திப்பில் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குஅழைப்புவிடுக்கப் படவில்லை என்ற பிரச்சினை வராது. ஏனெனில் சம்பந்தன் இல்லாமல் இந்தச் சந்திப்பு நடக்காது. அவர் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் தமிழ் அரசுக் கட்சி பிரச்சினை இன்றி ரணிலைச்சந்தித்துப்பேசும் என்றே தெரிகின்றது. ஆனால் மே 11, 12, 13 சந்திப்புக்களுக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்படாவிட்டால் கலந்து கொள்வதில்லை என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முடிவு செய்திருப்பதால் அந்தச் சந்திப்பு நிகழுமா என்பது சந்தேகம்தான்.

- இடிமின்னல் -

## துயிலுமில்லக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணிக்கு அருகில் இருக்கின்ற 23 ஆவது சிங்க ரெஜிமென்ற்படையினர்தமது பிள்ளைகளின் உடலங்கள் விதைக்கப்பட்ட இடத்தில் விவசாய செய்கையில் ஈடுபடுவதோடு கிறிக்கட் விளையாடுவதும் உணவகம்நடத்துவதுமாக உள்ளனர். இவர்களை குறித்த காணியை விட்டு வெளியேற்றி தமது பிள்ளைகளை நின்மதியாக அஞ்சலிக்க ஏற்ப்பாடு செய்து தரவேண்டும் என்பதே பெற்றோரின் கோரிக்கையையாக இருக்கின்றது.

"எமது உறவுகளை அஞ்சலிக்க வழியில்லாமல் மன அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். இது தொடர்பாக அனைத்து அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும்இணைந்துகுறித்த காணியை இராணுவத்திடம் இருந்து மீட்டு தந்து எமது பிள்ளைகளை அஞ்சலிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். தவறும்பட்சத்தில் குறித்த காணியை மீட்க சாகும்வரை பட்டினி கிடப்போம்" - என்றார்கள் அவர்கள்.

## வங்கக்கடலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மேற்கு மற்றும் தெற்கு கடலோரப் பகுதிகளில் அவ்வப்போது மணிக்கு (40 - 50) கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வீசும்சூறாவளிஇலங்கை கரையோரங்களையும் தாக்கும் என இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது.

## கடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை அழுத்தமாக கூறுகின்றோம்.

அவ்வாறான தரப்பினர் இந்தநாட்டுமக்களின்நிதியுடன் மீண்டும் விளையாடுவதற்கு நினைத்தால் அது பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும்.

குறிப்பாக, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பைச் செய்கின்றபோது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு என்ன நடக்கும் என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

வெள்ளைப் பூண்டை பொடிப்பொடியாக்கி மக்களுக்கு வழங்கும் செயற்பாடுதான் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தின் பொது நிதிக்குழுவின் தலைமைப் பொறுப்பு ஊழல்மோசடிகுற்றச்சாட்டுக்கு இலக்கான ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்விதமான தலைமையின் கீழ் நிதி விடயங்கள் கையாளப்பட்டு சர்வதேச திட்டங்கள் கொண்டுவரப்படுமாக இருந்தால் அதனை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த னையின் பிரகாரம் முன்னெடுக்கப்படவுள்ள கடன் மறுசீர மைப்பை மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். அதன் மூலம் மக்களின் நிதி பாதுகாக்கப்படும், நாடு பாதுகாக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்பதை ஆளும் தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் - என்றார்.

## சரியான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்டத்தினை கொண்டுவருவதால் எந்தவிதமான பயனுமில்லை. ஊழல்மோசடிகளை மேற்கொண் டவர்கள் தற்போதுபொதுக்கணக்குழுவின் தலைமைப் பொறுப்பினை ஏற்குமளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன.

அதுமட்டுமன்றி ஊழல் மோசடி செய்கின்ற அரசியல் வாதிகள்இன்னமும்செயற்பாட்டில் உள்ளார்கள். ஆகவே ஊழல் மோசடிகளை தடுப்பதற்கு சட்டங்கள் மட்;டுமல்ல. ஊழல்மோசடிகளை தடுக்க வல்ல அரசியல் ரீதியான தலைமைத்துவமே முக்கியமாகின்றது. அந்த மாற்றம் ஏற்படுத்தப்படாத வரையில் எந்தச் சட்டங்களாலும் பயனில்லை - என்றார்.

## பயங்கரவாதத்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மனிதன் நடமாடும் சுதந்திரத்தை பறிப்பதாக அமைவதோடுஊடகங்களைஅடக்குவதாகவும் அமைகிறது.

மேலே குறிப்பிட்டது போன்றுஒருவர்பேசினாலும் கைது செய்யப்படலாம் பேசாமல் இருந்தாலும் கைது செய்யப்படலாம் என்பதற்கு உதாரணம் ஒருவர் பொது வெளியில் பேசிய விடயங்களை அரசுக்கு எதிரானது எனகூறிஅவரைகைதுசெய்ய முடியும் அவ்வாறு ஒருவர் பேசியதை கேட்டுக் கொண்டிருந்தவரை அரசுக்கு எதிராக தூண்டப்படுகிறார் எனக் கூறி அவரையும் கைது செய்ய முடியும்.

ஊடகங்கள்ஒருவர்கூறிய விடயத்தை அச்சு ஊடகங்களில் எழுதுவதோ இலத்திரனியல் ஊடகங்களில் பதிவிடுவதோ அல்லது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதை அரசுக்கு எதிரான செயற்பாடு என கூறி கைது செய்ய முடியும்.

ஏனெனில்பயங்கரவாதம் என்பதற்கு சரியான விளக்கங்களோ அல்லது வரையறைகள் இதுவரை குறிப்பிடப்படவில்லை.

அரகலைபோராட்டத்திற்கு பின்னர்இனியொருவலுவான போராட்டம் இடம் பெறுவதை தடுக்கும் முகமாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவரை 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க முடிவதோடு பிணை வழங்குவதானால் சட்டமா அதிபரிடம் அனுமதிபெறப்படவேண்டும்.

ஆனால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்படுவதோடு நீதவான் நீதிமன்றத்தால்பிணைவழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

18 மாதங்களாக தடுத்து வைக்கப்படுவதை மூன்று மாதங்களாக புதிய சட்டமூலத்தில் கூறப்பட்டாலும் வழக்கு தாக்கல் தொடர்பில் சுமார் 20 வருடங்கள் வரை சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமலே இழுத்தடிக்க முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் கைது செய்யப்படும் நபர் ஒருவர் அந்தப்பிரதேசத்தின் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் ஒப்புதலுடன் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லாமல் மூன்று மாத தடுப்பு காவலில் வைத்திருக்க முடியும்.

மேலும் நீதிமன்றத்துக்கு உரிய அதிகாரங்கள் சில ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு உட்பட்டதாக மாற்றி புதிய சட்ட மூலத்தில் வெளி வர உள்ளது.

அதாவது நாட்டுக்குள் செயல் படும் தனி நபர்களை அல்லது குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் நிதிகளை முடக்குவதற்கும் உத்தரவிடும் அதிகாரம் நீதிமன்றங்களில் இருந்து நிறைவேற்று ஜனாதிபதியின் கைகளுக்கு செல்கிறது.

ஒரு தனி மனிதன் நாட்டுக்குள் நடமாடும் சுதந்திரத்தை ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்துக்குள் நடமாடும் சுதந்திரம் அல்லது வெளிநாட்டுக்கு செல்வதையோ ஜனாதிபதி நினைத்தால் தடுப்பதற்குரிய அதிகாரம் புதிய சட்ட மூலத்தில் வகுக்கப்பட்டுள்ளது

இவ்வாறான நிலையில் நாட்டினுடைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ யார் என்ன சொன்னாலும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவோம் எனக் கூறுகிறார்.

அவரின் கருத்தை பார்க்கும் போது நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதச் சட்டத்தை முற்றாக நீக்குவேன் என சர்வதேசத்திடம் வாக்குறுதி அளித்த நிலையில் தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபை தயாரித்தவர்களில் ஒருவரான நீதி அமைச்சர் விஜயதாசநிறைவேற்றுவேன் எனக் கூறும் போது ஜனாதிபதி மௌனமாகவே உள்ளார்.

இவர்கள் ஆட்சி அதிகாரம் தொடர்ச்சியாக தங்களிடமே இருக்க வேண்டும் என்பதில் கவனமாக உள்ள நிலையில் புதியபயங்கரவாதஎதிர்ப்புசட்ட மூலம் நிறைவேறுகிறதோ இல்லையோ தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத சட்டத்தை தொடர்ந்து வைத்திருக்கவேண்டும்என்ற மனோநிலையில் உள்ளனர்.

ஆகவே பல்வேறு ஆபத்துக்கள் நிறைந்த புதிய பயங்கரவாதஎதிர்ப்புசட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு தென் இலங்கை மக்களும் தயாராக உள்ளநிலையில்சிறுபான்மை மக்களும் அதற்கு ஆதரவாக செயல்படுவதே காலத்தின் கட்டாயம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சேவைத்துறையும் 2 சதவீதமான சரிவைச் சந்தித்துள்ளது. இதனால் தான் நாட்டின் மொத்தப்பொருளாதாரமும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்த நிலைமைக்கு யார் காரணம்? ராஜபக்ஷக்களும், ரணில் விக்கிரமசிங்கவும் தான் காரணம். 2015 முதல் 2019 வரையில் ரணில் விக்கிரமசிங்கதான் பிரதமராக இருந்தார். இந்தக் காலத்தில்தான் பெரும் வீழ்ச்சி தொடங்கியது. அவர்தான் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளினார்.

அவ்வாறான நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்க திறமையானவர் என்று பரப்புரை செய்யப்படுகின்றது. நாட்டை மெல்ல மெல்ல மீட்கின்றார் என்று கூறப்படுகின்றது. இது தவறான முன்னுதாரணமாகும். இருப்பதையும் இழக்கும் நிலைமை தான் ஏற்படப் போகின்றது.

ஆகவேநாட்டில்அரசியல் திடநிலை அவசியமாகின்றது. அதனை உருவாக்கியதன் பின்னர்தான் ஏனைய விடயங்களை உறுதி செய்ய முடியும். இல்லாவிட்டால் நிலைமைகள் இன்னமும் மோசமாகும் - என்றார்.

## ரணிலின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வடக்குக்கிழக்கைத்தனித்தனியாகக் கையாளும் ரணிலின் இந்தத் தந்திரத்துக்கு எமது நாடாளுமன்றஉறுப்பினர்கள் பலியாக வேண்டாம் என்று தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசுவதற்கு விடுத்திருக்கும் அழைப்புத் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தஅறிக்கையில்அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி விடுக்கும் அழைப்பொன்றைத் தமிழர் தரப்பு நிராகரிக்க முடியாது. அவர் தீவிர சிங்கள - பௌத்த மேலாதிக்க நிலைப்பாடு உடையவராக இருப்பினுங்கூட நாட்டின் தலைவர் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அவருடன் பேசியே ஆகவேண்டும். ஆனால், தனித்தனிக் கட்சிகளாக அல்லாது அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் உள்வாங்கி ஒருமித்த தமிழ்த் தேசியத்தின் குரலாகப் பேச்சு மடையில் அமருதல் வேண்டும். அப்போதே பேச்சை வலுவுடன் எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை வடக்குக்கான பிரச்சினையாகத் தென்னிலங்கை உருவகித்து வருகிறது. கிழக்கு மாகாணத் தில் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களினால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவர்களிலும் அரச ஆதரவு நிலைப்பாடு உடையவர்களே அதிகம். இந்நிலையில் பேச்சு மேடையில்வடக்கும்கிழக்கும் தனித்தனியாகப் பங்கேற்பது தமிழ்த் தேசியத்தின் குரலைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும்.

ரணில் விக்கிரமசிங்க தந்திரமான அரசியல் நகர்வுகளுக்கு மிகவும் பிரசித்தமானவர். நல்லாட்சிக் காலத்தில் அவர் தொடங்கிய தீர்வுத் திட்டம் பிசுபிசுத்துப்போனதை நாடறியும். அவரது தற்போதைய பேச்சுக்கான அழைப்பின்பின்னால் இருக்கக்கூடிய அபாயங்களைத் தமிழ் அரசுக் கடட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) புரிந்து கொள்ள வேண்டும். தமிழர் தரப்பில் தாமே பெரும்பான்மை என்ற இறுமாப்பைப் புறந்தள்ளி, ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்துக்களையும் உள்வாங்கித் தனது சந்திப்பின்போது பிரதிபலிக்கவேண்டும்.

தமிழ் அரசுக் கட்சி தனது சந்திப்பில் ஜனாதிபதி வடக்குக் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனியாகச்சந்திக்கும்அழைப்பை அடியோடு நிராகரிக்க வேண்டும். வடக் குக் கிழக்கு நாடாளுமன்றஉறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதற்கான கோரிக்கையை அழுத்தமாக முன்வைக்கவேண்டும். தவறின், ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரத்துக்கு முன்னால் மீண்டும் தோற்றவர்களாகிவிடுவோம். மீண்டும் மீண்டும் தவறிழைத்த தரப்பாகவே தமிழர்கள் இருந்ததாக வரலாறும் பதிவு செய்ய நேரிடும் - என்றும் தெரிவித்துள்ளார்.

## வெடுக்குநாறி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தற்காலிக தகரக் கொட்டகையினை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அறிவுறுத்தினார். ஆலய அருகில் அமைந்திருந்த சிறிய பெட்டிக் கடையையும் அங்கிருந்து அகற்றுமாறும் கூறுயுள்ளார்.

ஆலய சூழலை அவதானித்த அமைச்சர் ஆலயத்திற்கு உழவு இயந்திரத்தில் எவரும் வருகை தரக்கூடாது எனவும் ஆலய நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார். எனினும் அவரும் அவரது குழுவினரும் உழவுஇயந்திரத்திலேயே அந்தப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை இந்தக் குழுவினர் சனிக்கிழமை குருந்தூர் மலைப் பகுதிக் கும் சென்று நிலமைகளை அவதானித்தனர். வெடுக்குநாறி, குருந்தூர் மலைப் பகுதிகள் தொல்லியல் திணைக்களத்திற்கு உரியவைஎன்றும்அங்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தப்படக்கூடாது என்றும் தெரிவித்தார்.

## கிழக்கு எம்.பி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துணைத் தலைவர் ஆர்.இராகவன் ரெலோ அமைப்பின் பேச்சாளர் கு.சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனநாயகக் கூட்டணிக்கான யாப்பு வரைவு வாசிக்கப்பட்டு அதில் சில சிறிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மாத காலத்திற்குள் திருத்தங்களை மேற்கொண்டு அதன்படி செயற்படுவதற்கு தயாராவதாகவும் மமுடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

## தெளிவூட்டல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த விடயத்தினையே நாம் நாட்டு மக்களுக்கும் கூறு கின்றோம். இந்த விடயத்தில் எவரும் அச்சமடைய வேண்டியதில்லை. மக்களைப் பாதிக்கின்ற எந்த விடயத்தினையும் நாம் முன்னெடுக்கப்போவதில்லை.

நாம் பொதுமக்களுக்குச் சுமையை ஏற்படுத்துகின்ற விடயங்களை தெளிவான விளங்கள்ஊடாகதெரியப்படுத்தவுள்ளோம். இதில் மறைப்பதற்கு எவுமில்லை. இந்த மாத இறுதிக்குள் அதனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.










காலைக்கதிர்
Kalaikkathir

# மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் பங்கேற்புடன் பொதுநலவாயத் தலைவர்களின் மாநாடு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்பு







மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் பங்கேற்புடன் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமற்றும்அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்குவாழ்த்துகளைகூறிய ஜனாதிபதி, அவருடன்சுமூகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இளையோரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலான கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்வதற்குபொதுநலவாயஅமைப்பு விரிவான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றார். டிஜிட்டல் மயமாக்கலின் ஊடாக தொடர்பாடல்களை வலுப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேநேரம், இம்மாநாட்டிற்கு இணையாக இடம்பெற்ற மற்றொரு நிகழ்வில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க கலந்து கொண்டார். குறித்த நிகழ்வானது பொதுநலவாய மாநாட்டிற்கு அமைவான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் சர்வதேச மேடையாகும்.

லண்டனுக்கான இலங்கை உயர்ஆணையர் சரோஜா சிறிசேன மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

# கிளிநொச்சி வளாகத்தைத் தனி பல்கலையாக தரமுயர்த்துவோம்

## கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகம் தனிபல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும்எனஅமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில்இடம்பெற்றமக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவம் கிளிநொச்சியைவிடுவித்தபின்னர்அந்த இடத்தைத் தமது முகாமாக மாற்றிக்கொண்டது. அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கதைத்துஅதனைபல்கலைக் கழகத்திற்கு பெற்றுக்கொடுத்துள்ளோம்.

அங்கு நான்கைந்து வளாகங்கள் வந்துள்ளன. காலக்கிரமத்தில் கிளிநொச்சி வளாகத்தை கிளிநொச்சி பல்கலைக்கழகமாகதரமுயர்த்தித் தருவோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியவீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகள் மோசமாகச் சேதமடைந்திருப்பது குறித்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவித்தார்.

ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது ஏற்படும் பல வீனங்களால் இத்தகைய தவறுகள் நிகழ்கின்றன. அதில் நாங்கள் கவனமாக இருக்கவேண்டும் அவை நடந்து முடிந்துவிட்டது. இந்திய தூதரகம்தான் ஒப்பந்தகாரர்களிற்கு அதனை கொடுத்திருக்கும். உடைந்த வீடுகள் தொடர்பான படங்களைத் தந்தால் அதனை இந்தியத் தூதரகத்திற்கு அனுப்புவேன்.

அண்மையில்ஜனாதிபதி இந்தியாவிற்கு செல்லவுள்ளார். பிரதமர் மோடிக்கும் அதனை நாங்கள் கொடுக்கலாம். உடனடியாக திருத்தத்திற்கு காசும் தரலாம். உங்களுடைய கோரிக்கைகளில் ஒன்று காணியுமாகும். அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்றவர்களிற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

அதற்கு மேலதிகமாகவே வேறுபிரதேசத்திற்குகொடுக்க முடியும். புலிக்குளத்திற்கு அருகில் காணி இருப்பதாக சொல்லப்படுகின்றது. அந்த காணி பல்கலைக்கழகத்திற்குரியது என்றெல்லாம் சொல்லப்படுகின்ற போதிலும் பயன்பாட்டில் இல்லை.

நாட்டின் சூழ்நிலை காரணமாககுறித்தகாணியினை விவசாயம் செய்வதற்காக பெற்றுத்தரலாம் என அவர் தெரிவித்தார்.

# பிரிட்டன் மன்னராக முடிசூடினார் சார்ள்ஸ்



பிரிட்டன் மன்னராக மறைந்தபிரிட்டன்மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மூத்தமகன்மூன்றாம்சார்ள்ஸ் இன்று முடிசூடிக்கொண்டார்.

மறைந்த பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது முடிசூட்டு நிகழ்ச்சியில் அணிந்த அதே எட்வர்ட் மகுடத்தை தலையில் அணிந்து முடிசூடிக் கொண்டார் அரசர் மூன்றாம் சார்ள்ஸ். இதையடுத்து, அவரது மனைவி கமீலா பார்கருக்கு ராணிக்கான மகுடம் சூட்டப்பட்டது.

இலண்டன் வெஸ்ட்மின்ஸ்டா தேவாலயத்துக்கு தங்கரதத்தில்வந்திறங்கினார் மூன்றாம்சார்ள்ஸ். அவருடன் ராணி கமீலாவும் வருகை தந்தார். அவர்களுக்கு இசை வாத்தியங்கள் முழுங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

முடிசூடுவதற்கான உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டு, உறுதிமொழிகளைஏற்றுக்கொண்ட நிலையில் முதல் முறையாக, வெல்ஸ் மொழியில் பாடல்கள் இசைக்கப்பட்டன.

முன்னதாக, பிரிட்டன் மன்னருக்கான அரியணை திறக்கப்பட்டு, தங்க அங்கி அணிந்திருந்த மன்னர் அதில் அமரவைக்கப்பட்டார்.

அங்கு அவரது கையில் செங்கோல் வழங்கப்பட்டது. பாரம்பரியமிக்கசிறியகரண்டியில் பிரத்யேக எண்ணெய் தலையில் விடப்பட்டது. பிறகு அரியணையில் அமர்ந் திருந்த பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் தலையில் கேன்டர்பரி பேராயர் எட்வர்ட் மணிமகுடத்தைச் சூட்டினார்.

சுமார் 700 ஆண்டுகால பாரம்பரியமிக்க மாளிகையில், பிரிட்டன் மன்னராக மூன்றாம்சார்ள்ஸ்முடிசூட்டிக் கொண்டார்.

மூன்றாம் சார்ள்ஸ் முடிசூடும்நிகழ்ச்சியைமுன்னிட்டு, இலண்டன் நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

மற்றொரு கையில் தடி ஏந்திஅவர்ஆட்சிப்பொறுப்பை முறைப்படி ஏற்றுக்கொண்டார்.

கடந்த 1953ஆம்ஆண்டு ஜூன் 2ஆம் திகதி மறைந்த இரண்டாம் எலிசபெத் பதவியேற்றுக் கொண்டார். சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டனில்மன்னர்முடிசூடும் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

உலக நாட்டுத் தலைவர்கள் உள்ளிட்ட 2 ஆயிரம் பேர் கலந்து கொண்ட நிலையில் இலங்கை சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

இந்தவிழாவில்பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பல்வேறு நாடுகளைச் சோந்த 100 முக்கியத் தலைவாகள், 203 நாடுகளைச் சோந்த பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் அரசகுடும்ப உறுப்பினாகள் பங்கேற்றனா.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டன் அரசியாக இருந்த இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டெம்பரில் மறைந்தார். இரண்டாம் எலிசபெத் மறைவைத் தொடாந்து அவரது மூத்த மகன் சார்ள்ஸ் கடந்த நவம்பரில் அரியணையேறியநிலையில்இன்றுமுறைப்படி முடிசூட்டிக்கொண்டார்.

# இந்திய ரூபாயில் வர்த்தகம் குறித்து புதுடில்லியில் மொறகொட பேச்சு

கொழும்பு, மே 07

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இந்திய ரூபாயில் வர்த்தகத்தை முன்னெடுப்பது குறித்துபேச்சு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஆணையர் மிலிந்த மொரகொடவிற்கும், இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரச நிர்வாகத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரியான கலாநிதி. பிரமோத் குமார் மிஸ்ராவிற்கும் இடையிலான சந்திப்பில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கலந்துரையாடலின்போது, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமான கடன் மறுசீரமைப்பு விடயங்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக உயர்ஆணையர் மொரகொட தெரிவித்தார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதையும் தான் வலியுறுத்தியுள்ளார்என்றும்அவர் கூறினார்.

மேலும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு, இலங்கையில் இந்திய முதலீடுகள், சுற்றுலாவை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையில் ஒத்துழைப்பு, இந்திய ரூபாயிலானவர்த்தகம்தொடர்பான முக்கிய விடயங்கள் இந்தக் கலந்துரையாடலின்போது ஆழமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஆணையரகம் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் கடன்சார் தரவுகளில் வெளிப்படைத்தன்மை அவசியம்

## ஜப்பான் வலியுறுத்து



இலங்கை எதிர்காலக் கடன் நெருக்கடிகளைத் தடுப்பதற்கு கடன்சார் தரவுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியமான தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதுஇன்றியமையாதது என்று ஜப்பானிய நிதியமைச்சர் ஷூனிச்சி சுஸூகி தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்று மற்றும் உக்ரேன் - ரஷ்ய போர் ஆகியவற்றுக்கு மத்தியில் கடன்சார் நெருக்கடிகளின் விளைவாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு உதவும் நோக்கில் அண்மையில் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து கூட்டாக அறிவித்துள்ள 'ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்புச்செயன்முறையை'பெரிதும் வரவேற்கின்றேன்.

இவற்றுக்கு மேலதிகமாககாலநிலைமாற்றம்சார்ந்த சவால்களைக் கையாள்வதற்கு ஆசிய - பசுபிக் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு உதவும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் புதிய செயற்திட்டமொன்றின் ஊடாக 25 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு ஜப்பான் அரசு எதிர்பார்க்கின்றது - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்னும் தமிழ்த் தேசிய நிகழ்வு

14 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்களில் முல்லைத் தீவின்ஒடுங்கியகடற்கரையோரமாகத்தமிழ்மக்கள்கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். நாளாந்தம் உயிரிழப்புக்கள் தொடர்பான தகவல்களை, துடுப்பாட்ட வர்ணனை போன்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவல நிலைக்கு போர்க் களத்திற்கு வெளியே இருந்த தமிழர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். வைகாசி மாதம் 18ஆம் நாள் வரையில் ஒவ்வொரு நாளும் இதே நிலை நீடித்தது.

பன்னாட்டரங்கில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் மக்கள் கொத்தணிகள் மீது வீசப்பட்டன, கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டோம் என்கிற வாக்குறுதிகளை மீறி அப்பாவி மக்கள் மீது அவை சரமாரியாக ஏவப்பட்டன, உணவும் மருந்துகளும் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன, மனித உரிமைகள் மதிப்பற்று கால்களின் கீழே போட்டு மிதிக்கப்பட்டன, உலக நாடுகளை நோக்கி தமிழ் மக்கள் எழுப்பிய அவலக் குரல் காற்றில் மதிப்பிழந்து கரைந்து போய்க்கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் செத்து மடிந்துகொண்டிருந்தார்கள்.

வைகாசி 18 இவை எல்லாவற்றினதும் நினைவாக ஒரு பொது நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ளது. போர் முடிவடைந்ததாக இலங்கையின் ஆட்சியாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்த திகதியே இந்த வைகாசி 18. அதேநாளில் அந்தப் போரால் பாதிக்கப்பட்ட, உயிர்களைக் காவு கொடுத்த மக்கள் கூட்டமாகத் தமிழர்கள் நினைவேந்தல்களை நிகழ்த்தினாலும் வைகாசி மாதம் முழுவதுமே துயரங்களைத் தாங்கிய நாட்கள்தான் தமிழர்களுக்கு.

போரின் இறுதி நாட்களிலும் சரி அதன் பின்னர் வந்த நாட்களில் வெளியே தெரியாமலும் சரி தமிழர்களின் உயிர்கள் தொடர்ந்தும் பலியெடுக்கப்பட்டுக்கொண்டே இருந்தன. ஒரு தசாப்த காலத்திற்குள் அவற்றை நாம் பெரும்பாலும் மறந்துவிட்டோம். இதே நாட்களில் கொண்டாட்டங்களும் களியாட்டங்களும் எமக்குச் சர்வசாதாரணமாகிவிட்டன. நினைவுகளை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவதற்குரிய சரியான, பொருத்தமான கட்டமைப்பை அரசியல் தலைமைகள் உருவாக்கத் தவறியமை, மக்களை உணர்வுகளில் இருந்து தூர விலக்கி வைத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் அத்தகைய நிலை ஏற்படாமல் அதனைத் தமிழ்த் தேசிய நிகழ்வாக மாற்றியமைப்பது அவசியம் அவசரம். இன்றிருக்கும் பொருளாதார நிலைகளில் முள்ளிவாய்க்காலில் நடக்கும் பொது நிகழ்வில் மட்டுமே அனைவரும் பங்கேற்கவேண்டும் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் அது தொடர்பான நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்கான ஏற்பாடுகளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு செய்யவேண்டும். இங்குள்ள பொது அமைப்புக்களுடனும் சனசமூக நிலையங்களுடனும் பேசி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் வாரத்தில் வழங்கப்படும் கஞ்சியை பரவலாக எல்லா இடங்களிலும், முக்கியமாக சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும் அவற்றைப் பரவலாக வழங்குவதற்கு ஒழுங்மைப்புச் செய்யப்படவேண்டும். சிறு சிறு குழுக்கள் மூலம் இவற்றைச் செய்வதற்கு முயற்சிக்கலாம். கஞ்சிக்கான ஆதரவை தமிழ் வர்த்தகர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதும் கடினமான காரியமல்ல. புத்தர் பரிநிர்வாணம் (சமாதி) அடைந்தத சித்திரா பௌர்ணமியில் நாடு முழுவதும் தானம் வழங்கப்படலாம் என்னும்போது ஆயிரம் ஆயிரம் மக்களின் உயிர்கள் ஆகுதியாகிய நினைவு நாட்களில் ஏன் நாடு முழுவதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்ப்படமுடியாது? எனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு தமிழ்த் தேசிய நிகழ்வாக மாற்றுவதற்கான திட்டமிட்ட ஒழுங்கமைப்பு முக்கியம்.

தற்போதைய அரசீயல் சூழலில் அது அவசியமானதும்கூட.

# தையிட்டி விகாரை விவகாரத்தில் அறிக்கை கிடைத்த பின்னர் தீர்வு

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டமை குறித்து அடுத்த வாரம் முழுமையான அறிக்கை கிடைக்கப்பெற்றதன்பின்னரே இந்த பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படும் என்று புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சட்டங்களினூடாக மதத்தைப் பின்பற்றுவதற்கு மக்களுக்குள்ள சுதந்திரத்தை மட்டுப்படுத்த நாம் விரும்பவில்லை. அரசியல்வாதிகளிடத்தில் ஒழுக்கமும், சகிப்புத் தன்மையும் ஏற்படும்வரை இவ்வாறான பிரச்சினைகள் மீள் நிகழாமையை எம்மால் உறுதிப்படுத்த முடியாது என்றார் அவர்.

யாழ்ப்பாணம்-தையிட்டி விகாரையை அகற்றக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய போராட்டம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்தும் ஏற்படுகின்றன. இதற்கானஅடிப்படைகாரணம் என்ன என்பது எமக்குத் தெரியவில்லை. அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெறுவதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர். வெடுக்கு நாறி ஆதிலிங்கேஸ்வர் ஆலய விவகாரத்திலும் இவ்வாறே இடம்பெற்றது.

அவர்களாகவே சென்று ஆலயத்தை உடைத்து அதனை நாம் உடைத்ததாகக் குறிப்பிட்டனர். இவ்வாறான பிரச்சினைகள் மீண்டும்ஏற்படாமலிருக்கவேண்டுமெனில் அரசியல்வாதிகள் அனைவரையும் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து நீக்கவேண்டும்.

எம்மை இனவாதிகளெனக் கூறுபவர்களே இறுதியில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இங்குள்ளது விகாரை என்று நாம் கூறினால் அவர்கள் அதனை கோவில் என்கின்றனர். பின் தொல்பொருளியல்திணைக்களத்தினூடாக ஆய்வுசெய்து பார்க்கும்போது அங்குள்ளது விகாரை என்பது தெரியவருகிறது.

பின்னர் அது தவறென்றும், எம்மை இனவாதிகளென்றும் விமர்சிக்கின்றனர். தொல்பொருளியல் ஆய்வு என்பது உண்மையை கண்டறியும் விஞ்ஞானமாகும். அவ்வாறிருக்கையில் உண்மைகளையும் கோட்பாடுகளையும் எவ்வாறு மாற்ற முடியும்?

கிளிநொச்சி மாவட்டத்தில் உடைந்து விழுந்த கோவில்களை எமது முயற்சியில் மீளப் புனரமைத்தமை தொடர்பில் எவரும் பேசவில்லை.

எம்மால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான விடயங்கள் ஒருபோதும் ஊக்குவிக்கப்படுவதில்லை. நிதி நெருக்கடிகாரணமாக அந்தவேலைத் திட்டங்கள் இடைநிறுத் தப்பட்டுள்ளன. அதற்கான நிதி திரட்டும் பணிகளையும் நாம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். குறித்த கிளிநொச்சி ஆலயங்களில் மிக தனித்துவமான கட்டடக்கலை காணப்படுகின்றது. உலகில் வேறெங்கும் அவ்வாறான ஆலயங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று இலங்கையிலுள்ள 7 சிவன் ஆலயங்களை மீளப் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சட்டங்களினூடாக மதத்தைப் பின்பற்றுவதற்கு மக்களுக்குள்ள சுதந்திரத்தை மட்டுப்படுத்த நாம் விரும்பவில்லை. இவ்வாறான மத விவகாரங்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனில் அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும்என்றசட்டத்தை அறிமுகப்படுத்தலாம். ஆனால் அனைவரும்மூத்தோர்என்ற அடிப்படையில் எம்மால் ஒழுக்கமாக நடந்து கொள்ள முடியுமல்லவா?

இந்நாட்டில் ஒழுக்கம் இல்லை. குறிப்பாக அரசியல்வாதிகளிடத்தில் ஒழுக்கம் இல்லை. அரசியல்வாதிகளிடம் ஒழுக்கமும், சகிப்புத் தன்மையும் காணப்பட்டால், ஏனையோருக்கிடையிலும் சகிப்புத்தன்மையை உருவாக்க முடியும். இவை இந்து மற்றும் பௌத்தவாதங்களின் அடிப்படையாகும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறும் இடத்துக்குச்சென்றால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒரு பிரிவினரும் அங்கு செல்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் அங்கு செல்கின்றன. வாக்குகளுக்காக அனைவரும் இவ்வாறு செயற்படுகின்றனர். மாறாக மக்கள் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை.

இவை அரசியல் விளையாட்டுக்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். அதன் காரணமாகவே அம் மக்கள் இவர்களுக்கு வாக்களிப்பதில்லை. எனவே மதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் விளையாட்டுக்களை விளையாட வேண்டாமென அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்விவகாரம் தொடர்பில் அடுத்த வாரம் அறிக்கை கிடைக்கப்பெறும். அதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும். உண்மைகளை அறியாமல் என்னால் எதனையும் கூற முடியாது - என்றார்.

# கொவிட் அவசரநிலை முடிவு

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச அவசர நிலையை முடிவுக்கு கொண்டுவரப்படுவதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் கொவிட் 19 பெருந்தெற்று பரவல் சர்வதேச ரீதியில் அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பால் அறிவிக்கப்பட்டது. கடந்த 2020 ஆம் ஆண்டு 30 ஆம் திகதி இந்த அறிவிப்பு விடுக் கப்பட்டிருந்த நிலையில், இந்த அவசர நிலை தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவசரநிலைநிறைவுக்குக் கொண்டு வந்ததால், உலகம் முழுவதும் சுகாதார அச்சுறுத்தலாக இருந்த கொவிட் 19 நிறைவடைந்துவிட்டதாக அர்த்தமல்ல என்று உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்று மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை குறைடைந்ததைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதும், தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுவதும் கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் நாளாந்தம் 6 கொவிட் - 19 தொற்றாளர்கள் பதிவாகியுள்ள போதிலும், அது ஆபத்தான நிலைமையல்ல என தொற்றுநோய் பிரிவின் தலைவர் மருத்துவர் சமிதி கினிகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் வெள்ளிக்கிழமை (5) கொவிட் தொற்றுக்குள்ளான இருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கம்பஹா மாவட்டத்தின் மஹர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த இரண்டு உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க வன்னிநாயக்க தெரிவித்துள்ளது.

## உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள்

# பொறுப்புத் தவறிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது குற்றப்பத்திரிகை

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளுக்கு முன்னர் தகவல் கிடைத்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மூலம் பொறுப்புக்களை தட்டிக்கழித்தமை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட நிலையில் அது தொடர்பிலான குற்றப்பத்திரங்கள் பொலிஸ் அதிகாரிகளிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தின் வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த தற்போதைய மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், தாக்குதல் நடக்கும் போது கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த தற்போதைய மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க ஆகிய அதிகாரிகளுக்கே இவ்வாறு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட கஞ்சா விவகாரத்தால் தற்போது பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள கட்டான பகுதிக்கு பொறுப்பாகச் செயற்பட்ட பொலிஸ் அத்தியட்சர் சிசில குமார, கொழும்பு வடக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சாகராக அப்போது கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச சஞ்ஜீவ பண்டார, அப்போதைய கட்டான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.


2019 ஏப்ரல் 21 நிகழ்ந்த குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து 11 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதீராக கடமை மீறல் அல்லது பொறுப்புக்களை தட்டிக்கழித்தல் தொடர்பில் விசாரணை நடாத்த சட்ட மா அதிபர் அப்போதைய பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு உத்தரவிட்டிருந்தார். அதன்படி அது தொடர்பில் விசாரணை செய்யும் பொறுப்பு பொலிஸ் மா அதிபரால் பொலிஸ் விடே விசாரணைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டது.

பொலிஸ் விடே விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் பின்னர், சட்ட மா அதிபர் குறிப்பிட்ட 11 பேரில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன தவிர ஏனையோர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# இறுதி வணக்கம்

மலர்வு
21-01-1961



உதிர்வு
04-05-2023

## அமரர் **தம்பிப்பிள்ளை ஜெயசீலன்** (கௌசிகர்)

**கணக்காளர் - 'கௌசிகர்' வாக்கிய/திருக்கணித பஞ்சாங்க கணிதர்**

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட **தம்பிப்பிள்ளை ஜெயசீலன்** (தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழைய மாணவன்) 04.05.2023 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் அமரர்களான தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய தபாலதிபர்), திலகவதி தம்பதியினரின் அன்பு மகனும் மயிலிட்டி அமரர் இளையதம்பி வாத்தியாரின் பேரனும், பிரேமா (கனடா), காலஞ்சென்ற சரோஜா (கனடா) மற்றும் அனுசியா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாஸ்கரன் (கனடா), புஷ்பராஜ் (கனடா), சிவசக்திசுந்தரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும்

யசூரினி, ஜினிதா, சிறிலேகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

**இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.**

**பார்வை:**
**06.05.2023 சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை**
**பார்வையும் கிரியையும்:**
**07.05.2023 ஞாயிறு அதிகாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை**
**தகனம்:**
**07.05.2023 ஞாயிறு காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை**
**இறுதி சடங்கு நிலையம்:**
**Chapel Ridge Funeral Home,** 8911 Woodbine Avenue, Markham, ON
**தகனத்திடல்:**
**Highland Hills Crematorium** - 12492 Woodbine Avenue, Gormley ON

**துயர் பகிர்வு தொடர்புகளுக்கு:**
**சகோதரி பிரேமா பாஸ்கரன் : 416 660 1818**
**சகோதரி அனுசியா யோகன் : 416 722 4137**

---

கனடா உலகத்தமிழர் பத்திரிகை
ஆழ்ந்த இரங்கலையும் இறுதி வணக்கத்தினையும் செலுத்துகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

## பெண்ணே துணிந்தெழு

அன்பென்னும் அமுதம்
ஆக்கிப் போடும் அவசரத்தில்
அலுப்பை கூட பாராது
அயராது உழைக்கும்
ஆல விருட்சம்தான் பெண் ...!

அடுப்பம் கரை தொட்டு
ஆராய்ச்சி விண்வெளிவரை
அகல கால் பதித்தும் - பெண்
அடிமைத்தனத்தை அகற்ற
ஆண்மைக்கு இன்னும் ஏன்
அவகாசம். .....!

மேடை போட்டு - பெண்ணை
மெருகேத்தி பேசும் ஆண்.
பேதமின்றி வீட்டில்
பேணுவது அரிது.

காடாள கணவன் பின்
தோளோடு சென்றவள் சீதை.
ஈழ நாடான்ற எம் தலைவனுக்கு
உயிர் கொடுத்த வீராங்கனைகள்
ஈழத்து எம் பெண்மைகள்.

போர்க்கொடுமை பரவ
பெரும் சுமை ஏறியது
வறுமையோடு வஞ்சகமும்
வாட்டி புரட்டியும்
நெஞ்சுரந்து நிற்கிறது
நேர்மையோடு ஈழத்து பெண்மை.

இதிகாச புராணம் தொட்டு
தற்போதைய தொழில்நுட்ப்பம் வரை
தன்நிகரில்லா பங்கு - பெண்ணால்
தரணியிலே தனித்திருக்க - ஆணே....!
நீ தரம் பார்த்து கொள்வதேன்.

பெண்மையை போற்றுவோம்
ஆண்பெண் பேதமை ஒளிப்போம்
நன்மையை பெருக்குவோம்
நாம் ஒன்றாக வாழுவோம்
நன்றாக நலமாவோம்.

றொபின்சியா பிரான்ஸ்

## கிளி. மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



பாடசாலை மாணவர்களிற்கு பாதணிகள் மற்றும் கற்றல்உபகரணங்கள்வழங்கும் நிகழ்வு தமிழரசு கட்சி அலுவலகத்தில்சனிக்கிழமை இடம்பெற்றது. குறித்தநிகழ்வு லண்டன் வோள்தம்ஸ்ரோம் கற்பகவினாயகர் ஆலயத்தின்நிதிப்பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், லண்டன் வோள்தம்ஸ்ரோம் கற்பகவினாயகர் ஆலய அறங்காவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த சிறிதரன், சரத் வீரசேகர இன்றைய தினம் வெடுக்குநாறி மலைக்கு படை பட்டாளங்களுடன் சென்றுள்ளமை மீண்டுமொருஇனவாதத்தைகக்கும் செயலாக அமையக்கூடும் என்றார்.

## போதையால் சீரழியும் இளைஞர்கள்!

ஏனிந்த போதை ஆட்டி படைக்குது!
உந்தன் பாதையை மாற்றி அமைக்குது!
தோழா உந்தன் புத்தியை சிதைக்குது!
இதனால் எந்தன் சித்தம் கலங்குது!

சாதிக்க பிறந்தவன் நீயடா இங்கு!
சோதிக்கும் போதை தேவையா உனக்கு?
நீயதை தடுத்து தூரவே துரத்து!
அதன்பின் வெற்றியை நெஞ்சில் நிறுத்து!

போதையின் வகைகள் ஆயிரம் உண்டு!
உடலினுள் சென்று உறுப்புகள் கருக்கிடும்!
உனக்கது அறியா களிப்புடன் இருப்பாய்!
ஒருநாள் உந்தன் கதையே முடியும்!

வேண்டாம் தோழா!விழிப்பாய் இருந்திடு!
வேண்டா போதையை தூண்டும் மனிதரின்!
நட்பினை தாண்டு! சாதனை வேண்டு?
நிச்சயம் நீதான் நாளைய தலைவன்!

- வி.அபிவர்ணா - முல்லைத்தீவு -






# எங்களில் ஒருத்தி!

எனக்குமிகவும்ஆச்சரியமாக இருந்தது! நல்லூரில் இருந்து எனது மூத்த சகோதரியின் வீட்டுக்குள் திடீரென நான் காலடி வைத்தபோதே அந்த ஆச்சரியத்தை சந்திக்க வேண்டியிருந்தது.

புதுப்பிக்கப்பட்ட நாற்சார்வீடு. நடுவிறாந்தையில் அழகானசோபாசெற்றிபோடப்பட்டிருந்தது. அப்படிப்போட்டிருந்த ஒன் கதிரையொன்றில் அமர்ந்தபடி, எனது சிறுபராயத்து பள்ளிக்கூடத்தோழனும், கந்தன் என எனது அக்காவால் அன்று அழைக்கப்பட்ட கந்தசாமி, வெள்ளி ரம்ளரை கையில் வைத்திருந்தபடி தேனீர் அருந்திக் கொண்டிருந்தான்.

அவனுக்கு எதிராக போடப்பட்டிருந்த ஈசிச்சியரில் எனது மூத்த அக்கா சாய்ந்திருந்தபடி அவனுடன் கதைத்துக் கொண்டிருந்தா. எழுபது வயதை எட்டிவிட்ட அக்காவுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுவிட்டதென தொலைபேசி அழைப்பு வந்ததால் திருகோணமலையிலிருந்து நான் அங்கு சென்றிருந்தேன்.

எனது அக்கா முனகி முனகியபடி கந்தசாமியுடன் மெல்லிய குரலில் கதைத்துக்கொண்டிருந்தா. வீட்டு வாசலில் என்னைக்கண்ட கந்தசாமி வாங்கோ தம்பி பாலன். உங்கடை அக்கா சொன்னவ நீங்கள் இண்டைக்கு திருகோணமலையிலை இருந்து வருவீங்களெண்டு எனக்கூறியபடி வரவேற்றான்.

தம்பிவந்திட்டானே, தம்பி பாலா உனக்கு ஆறேழு வருத்துக்குப் பிறகு இப்பத்தான் என்ர நினைப்பு வந்ததாக்கும். அதுவும் நான் ரெலிபோன் செய்து கூப்பிடாட்டி இப்பவும் நீ வந்திருக்கமாட்டா அக்கா என்னைக் கண்ட ஆதங்கத்தில் ஏதோ கொட்டித்தீர்த்தாள்.

பயணத்தின் இடையில் முருகண்டியில் பஸ் நிற்பாட்டப்பட்டபோது, அக்காவுக்காக வாங்கிய அப்பிள், தோடம்பழங்களை அக்காவின் கைகளுக்குள் வைத்துவிட்டு, முருகண்டியில் வாங்கிய கச்சான் கடலைப் பையை எடுத்து பாலனுக்குக் கொடுத்தேன்.

தம்பி குளிச்சிட்டு வரப்போறியோ, இல்லை தேத்தண்ணியை குடிச்சுப்போட்டு குளிக்கப்போறியோ அக்கா என்னைப் பார்த்துக் கேட்டா.

களைப்பா இருக்கக்கா, தேத்தண்ணி ஒண்டு குடிச்சாத்தான் உசாராயிருக்கும். பிறகு குளிப்பம். உங்களுக்கு ஏலாது எப்படி தேத்தண்ணி வைக்கப்போறியள் எனக் கூறியபடி எழுந்தநான், நானே தேனீரைத் தயாரிக்கும் நோக்கில் குசினிப்பக்கம் போனேன்.

அங்கே ஒரு இளம்பெண் நின்று சமைத்துக் கொண்டிருந்தாள். யாரக்கா உந்தப்பிள்ளை? வேலைக்கு நிண்ட மனசி திடீரெண்டு விட்டிட்டு போட்டா எண்டு போனமாசம் ரெலிபோனிலை சொன்னீங்கள். இதார் புதிசா ஒருபிள்ளை என்று அக்காவிடம் விசாரிக்க,

வேறையார் தம்பி. உந்த கந்தசாமியின்ரை இளையவள்தான் அவள். கார்த்திகா இங்கை வந்து ஒரு கிழமையாச்சு அக்கா சொல்வதைக் கேட்ட எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

காலம் எப்படி எப்படியெல்லாம் மாறிக்கொண்டுவருகுது என நினைக்க மனசுக்குள்ளை ஒருபுறம் சந்தோமாக இருந்தாலும், சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளால் அக்கா போன்றவர்கள் எப்படியெல்லாம் மாறிவிட்டார்கள், மாற்றப்பட்டு விட்டார்கள் என நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

****

கந்தன் என்ற கந்தசாமிக்கு எனது வயதுதான் இருக்கும். நானும் அவனும் ஆறாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்புவரை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். வகுப்பு ஒன்பதுக்குப்பின் கந்தசாமி வறுமை காரணமாக தனது படிப்பை கைவிட்டு தகப்பனாருடன் கூலிவேலை செய்ய கிளம்பிவிட்டான்.

கந்தசாமி எனது அயலூரான கலட்டியிலும், நான் தலையாழி என்ற சிற்றூரிலும் வசித்து வந்தோம். என்னை எனது ஐயா (தந்தையாரை அப்பொழுது நாம் ஐயா என்றே அழைத்து வந்தோம்) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே சேர்த்துவிட முயற்சியெடுத்தார். எனது அண்ணன்மார் இருவர் அங்கு படித்தபோதும் எனக்கு அங்கு அனுமதி கிடைக்கவில்லை. அதனால் என்னை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் அய்யா மனமின்றி சேர்த்து விட்டார். ஆறாம் வகுப்பில் அங்கு சேர்க்கப்பட்ட நான், அதற்கு முந்திய அரிவரிதொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை கலட்டியிலிருந்த மெதடிஸ்மிசன் பாடசாலையில் படித்தேன். ஆனாலும் இவ் இரு பாடசாலைகளிலும் நான் படிப்பதுபற்றி அய்யாவுக்கு கொஞ்சமும் விருப்பமில்லாமல் இருந்தது.

மெதடிஸ்மிசன் பாடசாலையிலும், பரமேஸ்வராக் கல்லூரியிலும் எல்லாச் சாதியச் சேர்ந்தவர்களும் சரிசமனாக சேர்ந்து படித்துவந்தனர். உயர்சாதி மனப்பான்மையில் பரம்பரையாக ஊறித்திளைத்த எனது தகப்பனாருக்கு இதுவெல்லாம் பிடிக்கவில்லை. எல்லாச் சாதிப்பிள்ளையளோடையும் சேர்ந்து படித்தால் நான் கெட்டுப்போவனென்பதுடன், குடும்பமரியாதையும் குழுமுழுசிப்போய்விடும் என்பதும் அவரது எண்ணமாயிருந்தது. என்ன செய்வதென அறியாத ஒருநிலையில் எனது தந்தையார் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்த்தாலும், எல்லோருடனும் நான் பழகுவதில் மிகவும் கண்டிப்பாகவும் நடந்து கொண்டார்.

என்னோடுபலஏழைச்சிறுவர்கள்படித்துவந்தனர். அவர்களுள் கந்தசாமியும் ஒருவன். நாம் இருவரும் மிக நெருக்கமான நண்பர்களாகி பழகிவந்தோம். ஆனாலும் எனது தகப்பனார் முன்னால் அந்த நட்பை காட்டிக்கொள்ளாமல் நான் நடந்துவந்தேன்.

கந்தசாமியின் தகப்பனார் வேலு, சாதாரண அன்றாடம்கூலியாக வேலைசெய்துவந்தார். அவருக்கு அன்றாடம் கிடைக்கும் கூலியிலேயே அவரது எட்டுப் பேர் கொண்ட குடும்பம் அரைப்பட்டினியோடை சீவித்துவந்தது.

பெரும்பாலும் வேலு எனது தகப்பனாரின் காய்கறித் தோட்டத்தில்தான் வேலைசெய்து வந்தார். எனது தகப்பனார் தொலைவிலே வருவதைக் கண்டால் வேலு மிகமரியாதையாக தோளில் இருக்கும் துண்டை எடுத்து கமக்கட்டில் வைத்தபடி மிக பயபக்தியுடன் நிற்பார். இதையெல்லாம் பார்க்கும் எனக்கு அந்தச் சிறுவயதிலேயே கோபம் கோபமாக வரும். வேலை செய்துதானே வேலு சம்பளம் வாங்கிறார். அதுக்கேன் இப்படி அவர் எனது தகப்பனாரின் முன்னால் கூனிக் குறுகி நிற்கவேணுமெண்டு எனக்குள் கேள்வி எழும்.

வேலு எங்கள் வீட்டுக்கும் இடைக்கிடை வருவார். விறகுகொத்தித்து, கதியால்போறுது, வேலியடைக்கிறது, முற்றத்தில் மரங்களுக்கு தண்ணி பாய்ச்சிறது இப்படி பலவேலைகளைச் செய்வார். அந்த வேளை கந்தசாமியும் தகப்பனாரோடு சேர்ந்து வருவான்.

நானும்கந்தசாமியும்பள்ளித்தோழர்களென்பதால், எனக்கு அவனைக் கண்டால் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கும். எங்களது வீடு அமைந்துள்ள நிலப்பரப்பு மிகவும்நீளஅகலமானதாலும், மரங்கள்சூழ்ந்ததாலும், எனது தந்தையாருக்குத் தெரியாமல் அவனுடன் கண்ணுக்கெட்டாத இடத்துக்கு சென்றுவிடுவேன். அந்த வேளை எனது உறவினர்களின் பிள்ளைகளும் அங்கு கூடுவர். கிட்டி அடித்தல், கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், போளை அடித்தல் என பல்வேறு விளையாட்டுக்களில் சிறுவர் நாங்கள் ஈடுபடுவோம். எங்கள் வயதொத்த சிறுமிகளும் அங்கு எம்முடன் சேர்ந்து விளையாடுவர். அந்த சிறுபராயத்தில் எம்மிடையே எந்தவித சாதி வேறுபாட்டு கலங்கங்களும் இதயத்தில் புகுந்து விளையாடவில்லை. அந்த பாகுபாடற்ற நிலையே இன்னும் எனது இதயத்தில் நிறைந்துள்ளதை எண்ணும் போது, என்போன்றவர்களின் அன்றைய இளவயதில் எம்மை வழிநடத்திச் சென்றவரும், எமது குருவாகவும், மானசீகமாக நாம் நேசித்த உன்னத மனிதராகவும் எமது அயலில் வசித்து வந்த காத்தியேசன் மாஸ்ரரை நான் நன்றி கூறுவதுண்டு.

வேலு தனது வேலைகளை முடித்து விட்டு, எமது வீட்டு வாசலில், தனது அழுக்குப் படிந்த துண்டால் வியர்வையை துடைத்தபடி அமர்ந்திருப்பார்.

எனது அம்மா ஒரு சோடாப்போத்தலுக்குள்ளை நிறைய தேனீரை ஊற்றி வந்து வேலுவிடம் கொடுப்பா. அதை மிக மரியாதையுடன் எழும்பி நின்று வாங்கி வேலு தாகந்தீர்க்கும் வேளை, கந்தசாமியும் விளையாடிய களைப்புடன் ஓடி வருவான். மகனுக்கு தான் குடித்த தேனீரில் அரைவாசியை பருகுவதற்கு வேலு கொடுப்பார். எனது தந்தையார் தான் நினைத்த கூலியைத்தான் வேலுவுக்கு கொடுப்பதுண்டு. வேலு எந்த வித ஆட்சேபனைகளுமின்றி அதை வாங்கிக் கொண்டு கந்தசாமியையும் கூட்டிக் கொண்டு போய்விடுவார்.

எனது மூத்த அக்காவான தனம் அக்காவுக்கு அப்பொழுது இருபத்து மூன்றுவயது இருக்கலாம். வேலு வாசலை விட்டு அகன்று சென்றதும், அவர் தேனீர் பருகிவிட்டு வைத்த சோடாப்போத்தலை அக்கா ஒரு கடதாசியால் மூடிப்பிடித்து எடுத்து, கோடியில் விறகு கொத்தி அடுக்கி வைத்திருக்கும் பரணில் வைத்துவிட்டு வருவது இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கிறது.

அதுமாத்திரமல்ல,டேய் பாலன் மூதேவி போய் குளிச்சிட்டுவா. அந்த கந்தனோடை கட்டிப்புரண்டு விளையாடிவிட்டு உள்ளை குளிக்காமல் வந்து பார் காலை முறிச்சிடுவன், குளிக்கேலாட்டி கந்தன்ரை வீட்டுக்கே போய் அந்தச் சாதியளோடைபோய் கிட என ஆக்ரோமாக அக்கா என்னைப் பார்த்து கத்துவதற்குப் பயந்து, கிணத்தடிக்குப் போய் போட்ட உடுப்புக்களை களைத்து குளித்து விட்டு, அக்கா கொண்டுவந்து தந்தவேறை உடுப்பை மாற்றிவிட்டே வீட்டுக்குள் நுழைவேன் நான்.

எனது அண்ணன்மார் இந்துக்கல்லூரியில் படித்த படியால் அவர்களுக்கு இருந்த மரியாதை பரமேஸ்வராக் கல்லூரியில் படிக்கும் எனக்குக்கிடைக்கவில்லை.

அக்கா அடிக்கடி அதைக் குத்திக்காட்டிக் கொண்டே இருப்பா!! உன்ரை கொண்ணன்மாரைப்பார் எல்லாச் சாதியளோடையும் சேர்ந்து விளையாடுறார்களே, நீ மாத்திரம் அவன் கந்தன், பூதன், நாகன் எண்டவங்களோடைத்தான் உன்ரை சகவாசங்களும் விளையாட்டும் தினமும் அக்காவிடம் இப்படியான வசைமாரியைக் கேட்டு எனக்கு அலுத்துப்போகும்.

எங்கள் வீட்டுக்கு தினந்தோறும் சின்னாச்சி என்ற நடுத்தரவயதுப் பெண் மரக்கறி கொண்டுவருவா. தின்னவேலிச் சந்தையில் பலவிதமான மரக்கறியளை வாங்கி அவற்றை ஒரு கடகப் பெட்டியில் போட்டு அங்கிருந்து கிட்டத்தட்ட மூன்றுமைல் தூரத்திலமைந்த எமது வீட்டுக்கு தலைச்சுமையாக கொண்டுவருவா. அயல்வீடுகளுக்கும் மரக்கறிவியாபாரம் சின்னாச்சிதான்.

எனது அம்மா தினமும் சின்னாச்சியிடம் வாங்கும் மரக்கறிகளுக்குரிய காசை கடனின்றி உடனுக்குடன் கொடுத்து விடுவா. அதனால் சின்னாச்சிக்கு அம்மா விடம் அதிக மரியாதையும், பிரியமும் கூட. சின்னாச்சி சொல்லுகிற விலையை எந்தவித கேள்வியுமின்றி அம்மா கொடுத்து மரக்கறி வாங்குவதை நான் அவதானித்துள்ளேன். பாவம் சின்னாச்சி, தின்னவேலிச் சந்தையிலையிருந்து மூண்டுமைல் நடையிலை, வெய்யில், மழையெண்டும் பாராமல் எங்களுக்கு மரக்கறி கொண்டு வந்து தாறாள். குடிகாரப்புருன் ஊதாரியாக தெருவிலை திரிஞ்சா அவளென்ன செய்வாள் ஆறு பிள்ளையளோடை. அந்த அப்பாவியிட்டை ஐஞ்சுபத்தை நாங்கள் சுரண்டி சீவிக்க வேணுமே. உங்கை பலசனங்கள் அந்த அப்பாவியிட்டை கடன் வாங்கிப் போட்டு அப்பவா, இப்பவா எண்டு ஏமாத்துதுகள். மனச்சாட்சிகில்லாத சனங்கள் உதுகள் என சின்னாச்சிபற்றிய இரக்க சுபாவத்தினை அம்மா பலரிடம் கதைப்பதை நான் கேட்பதுண்டு.

அம்மா, இரண்டு வெள்ளாடுகள் வளர்த்துவந்தா. அந்த ஆடுகளுக்கு புல்லுக்கட்டுக்கள், குழைகள் என்பவற்றை கொண்டு வந்து கொடுப்பவளும் சின்னாச்சி தான். அதனால் சின்னாச்சியின்மேல் இனியில்லையெண்ட பற்று அம்மாவுக்கு. சின்னாச்சி மரக்கறி எல்லாம் விற்றுவிட்டு தனது வீட்டுக்கு திரும்புமுன் அம்மாவை சந்திக்காமல் செல்லமாட்டா.

சின்னாச்சியைக் கண்டதும் சுடச்சுட ஆட்டுப்பாலுக்குள்ளை கடுமையான சாயமும், சீனியும் போட்டு தேனீர் தயாரித்து வேலு தேனீர் குடிக்கும் போத்தலைக் கழுவி அதற்குள் நிறைத்து கொண்டு வந்து அவளுக்கு கொடுப்பா. அதைக் குடித்த சின்னாச்சியின் முகத்தில் ஒரு நன்றி உணர்ச்சி பிரவாகிக்கும்.

அம்மாபோடும் ஆட்டுப்பால் தேனீர் இன்னும் எனது உதடுகளில் ஒட்டி உள்ளத்தில் இனிப்பதாகவே நினைக்கிறேன். அந்தத் தேனீரின் ருசிக்கு எதுவும் ஈடாகாது, அப்படி ஒரு சுவை.

சின்னாச்சிக்கோ, வேலுவுக்கோ போத்தலில் தேனீர் கொடுப்பதில் அம்மாவுக்கு கொஞ்சமும் சம்மதமில்லை. அதுகளும் மனுசப்பிறவிகள்தானே, ஏன் அப்பிடிச் செய்யவேணும் என எனது தந்தையாரிடமும் மூத்த அக்காவிடமும் அம்மா விவாதிப்பதுண்டு.

அப்பநாங்கள்தேத்தண்ணிகுடிக்கிறமூக்குப்பேணிக்கையே குடுக்கச் சொல்லுறியள். எங்கடை ஆக்கள் கண்டால் எங்கடை வீட்டிலை கை நனைக்குங்களே. அம்மாவுக்கு கொஞ்சமும் அறிவில்லை. எல்லாரையும் நாங்கள் வைக்கிற இடத்திலை வைக்கவேணும். கொஞ்சம் உவங்களுக்கு இடங்குடுத்தால் தலையிலை ஏறிப்போடுவாங்கள். உங்கை பாக்கேல்லையே மாவிட்டபுரத்துக்கையும், நல்லூருக்கையும் தாங்கள் உள்ளே போகவேணுமாம், எங்கடை அம்மாவுக்கு உதெல்லாம் விளங்கினாத்தானே அக்காவின் பிரசங்கம் கேட்டு எனக்கும் ஆத்திரமாகத்தான் இருக்கும். சும்மா கதைச்சனெண்டால் அக்காவிட்டை உதைதான் கிடைக்குமெண்டு எனக்குத் தெரியும்!

அம்மாவுக்கு எனது தந்தையாரினதும், மூத்த அக்காவினதும் பிடிவாதத்தால் தனக்கு பிடிக்காத போத்தல் தேனீர் காரியத்தை செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

எனது அம்மா இறந்தபின் எனது உறவினர்களை விட, என் அயல் கிராமத்தைச்சேர்ந்த வேலு, சின்னாச்சி போன்றோரின் குடும்பங்களே வீட்டு முற்றத்தில் கூடி இருந்து அலறி ஓலமிட்டதை எண்ணும்போது இப்பொழுதும் எனது கண்களிலிருந்து மழை கொட்டும்.

அந்த வேற்றுமை பாராட்டாத தாயின் வயிற்றிற் பிறந்த நான், இன்றுவரை அந்தத் தெய்வத்தின் கொள்கைகளைப் பின்பற்றி வருவதையிட்டு ஆறுதல் கொள்வதுண்டு.

ஆனால் அக்கா, எனது மூத்த அக்கா ஆமாம் அன்று நான் பார்த்த மூத்த அக்கா. தினமும் வசைபாடித் திட்டித்தீர்த்த, ஒதுக்கித் தள்ளிய அதே சாதியைச் சேர்ந்த கந்தனென அக்காவால் அன்று அழைக் கப்பட்ட கந்தசாமியை நடுவீட்டிலை குசன் இருக்கையில் இருக்கவைத்து வெள்ளிரம்ளரில் தேனீர் கொடுத்ததை எண்ணும்போது எனக்கு சிரிப்பாக வந்ததுடன், இதுவெல்லாம் உண்மையான காட்சிகளா என யோசிக்கவும் வைத்தது.

அந்தகந்தன்என்றகந்தசாமியின்மகள்குசினிக்குள் நின்று அக்காவுக்காக தான் சமைத்த உணவுகளை ஒரு வெள்ளித்தட்டில் போட்டு வைத்துவிட்டு, அம்மா, எழும்புங்கோ, மணி மத்தியானம் இரண்டாச்சு, பசியோடை கிடக்கிறியள். தம்பி வந்திட்டார் தானே இனி உசாரா சாப்பிடுங்கோ எனச்சொல்லியபடி கையில் தண்ணிச்செம்புடன் வந்து அக்காவின் அருகே நின்றாள்.

அக்கா எழும்பி இருக்கமுடியாமல் தட்டுத்தடுமாற, கார்த்திகா என்ற கந்தசாமியின் இளையவள் அக்காவின் கைகளை மெல்லப்பிடித்துத் தூக்கிவிட்டாள்.

கையில் இருந்த தடியை ஊன்றியபடி அக்கா வெளியேசென்று முகத்தைசற்றுக்கழுவி, கைகளையும் கழுவிக்கொண்டு ஈசிச்சியரில் வந்தமர்ந்தா.

கார்த்திகா கையில் ஒரு துவாயை எடுத்து அக்காவின் முகத்தை மெல்லமாக துடைத்துவிட்டாள். அந்த வேளை அக்காவின் முகத்தில் ஒரு சிறிய கவலைக்கீற்று தோன்றியது போலிருந்தது. தன் மகள் செய்யவேண்டிய வேலையை வேறொரு கை செய்கிறது என்ற கவலையாக இருக்கலாம். கார்த்திகா அக்காவுக்கு சாப்பாட்டைக் கொண்டுவந்து அவவின் கையிலே கொடுத்து சாப்பிடச்சொன்னாள்.

தம்பி நீயும்வாவன் சாப்பிட அக்கா என்னையும் அழைத்தா. நான் குளித்துவிட்டு வருவதாகக்கூறி கிணற்றடிக்குப் புறப்பட்டேன்.

தம்பிபாத்றூமிலைபோய்குளி, மூண்டுவருத்துக்கு முதல், மகன் தன்ரை மனிசி பிள்ளையள் இங்கை வர்ரேண்டதுக்காக பாத்றூம், கொமெட் கக்கூசும் கட்டச்சொல்லி காசனுப்பினவன். என்ரை அறைக்குப் பக்கத்திலேயே கட்டச்சொன்னவன். பிள்ளையள் நிலத்தில இறங்கமாட்டுதுகளாம் பாத்றூம் போக. அவன்ரை மனிசி கொமட் இல்லாட்டி இஞ்சை வரமாட்டேண்டு சொல்லிட்டாளாம். அதுக்காக மூண்டுலச்சம் செலவழிச்சு புதிசா அதுகளை கட்டினனான். அதுக்குள்ளை போய் குளிச்சிட்டு கெதியிலை வா சாப்பிட என அக்கா சொன்னததால் பாத்றூமுக்குப்போய் நுழைந்து குளிக்கத் தொடங்கினேன். மாபிள்போட்ட பாத்றூமும் கொமட் கக்கூசும் மிகவும் சுத்தமாக இருந்தது பெரும் ஆறுதலைத் தந்தது. குளித்துவிட்டு வெளியே வந்தேன்.

வந்த எனக்கு கார்த்திகா மதிய உணவை பரிமாறினாள். கந்தசாமியையும் அழைத்தேன். அவன் தான் வீட்டுக்குப்போய் சாப்பிடுவதாகச் சொல்லியும் நான் விடவில்லை. கார்த்திகாவிடம் ஒரு வெள்ளித்தட்டை கொண்டுவரச்சொல்லி அதற்குள் நானே சோறுகறி போட்டுவிட்டு பக்கத்தில் வரச்சொல்லி இருத்தி சாப்பிட வைத்து நானும் சாப்பிட்டேன்.

தம்பி பாலா அந்தச் சின்னக்கால நினைவுகளை நினைச்சா இப்பவும் மனதுக்குள்ளை ஏதோ செய்யுது. அண்டைக்கு இருந்த பாலாவின்ரை குணத் திலை கொஞ்சமும் மாறாமல் இண்டைக்கும் இருக்கிறதைப்பாத்த எனக்கு வலுத்த சந்தோமாயிருக்கு என தனது கண்களை இடதுகையால் துடைத்தபடி சாப்பிடத் தொடங்கினான் கந்தசாமி. அவன் சொன்னதை அக்காவும் அவதானமாகக் கேட்டாலும் அதைப்பற்றி எதுவும் அவ கதைக்கவில்லை. ஒரு குற்றஉணர்வு அக்காவின் மனசிலை தோன்றி மறைந்திருக்கலாம்

****

அக்காவின் கணவர் ஆம் எங்களது அத்தான் காலமாகி ஆறேழு வருமாகிறது. அதிலிருந்து அக்கா தனது மனக்கவலைகளைத் தாங்கியபடி தனியாகவே வாழ்ந்து வந்தா.

அக்காவின்பிள்ளைகள்இருவரும்வெளிநாடுபோய் குடும்பம் குடித்தனமாய் வாழத்தொடங்கி பதினைஞ்சு வருத்துக்கு மேலிருக்கும். மகன் ரவி லண்டனிலை வசிக்கிறான். அவனுக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு ஆணும். லண்டனிலியே அவர்கள் படித்தும் வருகின்றனர்.

மகள் இந்திரா கனடாவிலை கணவர் பிள்ளைகளுடன் வசிக்கிறாள். இந்திராவுக்கும் இரண்டு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண்பிள்ளைகளுமுண்டு.

அவ்வப்போது மகன் ரவியும், மகள் இந்திராவும் அம்மாவுடன் ரெலிபோனில் கதைப்பதுண்டு. பேரப்பிள்ளைகளும் கொச்சைத்தமிழில் கதைப்பர். தனது பேரப்பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது இங்கிலீசு மாத்திரமே தெரியுமெண்டு வருகிற போகிற ஆக்களுக்கு கூறுவதில் அபாரபெருமை அக்காவுக்கு. இடியப்பம், புட்டு, தோசை, இட்டலி எண்டால் அதுகளுக்கு பிடிக்காதாம். என்ன தமில் சாப்பாடெண்டு பகிடியும் பண்ணுங்களாம். பிசாவோ, கிசாவோ தானாம் அதுகளுக்கு வேணுமாம் என்று சொல்வதிலும் தனது பேரப்பிள்ளைகளைப் பற்றி புகழுவதில் அக்காவுக்கு அலாதிப்பிரியம்.

போர் முடிந்த கையோடு மகன் தனது பிள்ளைகளையும் மனிசியையும் இலங்கைக்கு கூட்டி வந்தான். அப்போ நல்லூர் கொடியேறியிருந்ததால் பிள்ளையளுக்கு அதையெல்லாம் காட்டவேணும் என்ற ஆசையில் கூட்டி வந்தான். அக்காவுக்கு பலகாலமாக மகனையும், பேரப்பிள்ளைகளையும் கண்ட புழுகத்தில் வருகிறபோகிற தெரிந்தவர்களுடன் கூட சரியாக கதைக்காமல் பெருமை பாராட்டி நடந்து கொண்டார். உறவினர்கள் வந்தால் உபசரிக்கும் அக்கா, அவர்களையும் புறக்கணித்து நடந்து கொண்டதால், மகனது குடும்பம் மீண்டும் வெளிநாடு சென்றதும் அக்காவை யாரும் எட்டிப்பார்க்காமல் கைவிட்டு விட்டனர். மகள் இந்திரா அடுத்த நல்லூர் திருவிழாவுக்கு குடும்பத்துடன் வந்து தாயை பார்ப்பதாக அறிவித்திருந்தாள்.

தந்தையாரின் இறுதிச் சடங்குகூட பிள்ளைகள் இருவரும் இல்லாமலேயே நடந்தேறியது. பிள்ளைகள் அதற்கான பணத்தை அனுப்பி வைத்ததோடு, இறுதிக் கிரியையை வீடியோ பிடித்து அனுப்பும்படி கேட்டதுடன், அந்திரட்டிக்கு கல்வெட்டு கவர்ச்சியாக அடித்து, ஊரை அழைத்துச் சாப்பாடு போடவும் தாராளமாக காசு அனுப்பியிருந்தனர். இதைச் சாட்டாக வைத்து அக்காவிடம் அதற்கு இதற்கெண்டு பணம் பிடிங்கி, எங்களது ஒண்டவிட்ட மருமகன் முறையான வரதன் இலட்சக்கணக்கில் சுருட்டி அக்காவை ஏமாத்தியதாக பின்பு நான் அறிந்து கொண்டேன்.

போர் சூழல், போக்குவரத்துக் கெடுபிடிகளால், அத்தானின் இறுதிச் சடங்கில் திருகோணமலையில் வேலைநிமித்தம் நிரந்தரமாக குடும்பத்துடன் குடியேறி வசித்த என்னாலும் கலந்து கொள்ள முடியவில்லை. எனது ஆண் சகோதரங்களும் எல்லாரும் வெளிநாட்டிலை பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வசித்ததால் அவர்களாலும் அவ்வேளை வந்து பங்குபற்ற முடியவில்லை.

அக்காவுக்கு அவ நோய்வாய்ப்பட்டு பாயில் விழுந்தவேளை உதவி செய்ய உறவினர் எவரும் முன் வரவில்லை. அப்படி ஆரும் உதவிசெய்ய வந்தாலும் அக்காவிடம் ஐநூறு ஆயிரமெண்டு பறிக்கும் நோக்குடனேயே வந்து சேருவர். அது அக்காவுக்குப் பிடிப்பதில்லை.

அக்கா வீட்டுக்கு கந்தசாமி அடிக்கடி வருவான். எமது குடும்பத்தினருடன் அவனது தகப்பனாரான வேலு முதற்கொண்டு பழகிய அந்த நாட்களிலிருந்து கந்தசாமிக்கு எங்கள் அனைவருடனும் ஒரு நட்பு இழையோடியிருந்தது. அந்த வகையில் தனியே நோய் வாய்ப்பட்டிருக்கும் எனது அக்காவை அவ்வப்போது பார்க்க வருவதுடன், அக்காவுக்கு, கடைக்குப் போய் சாமான்கள் வாங்கி வருதல், அக்காவை டொக்டரிட்டை கூட்டிக்கொண்டு போதல், பால் வாங்கிக் கொடுத்தல், அன்றாட உணவுகளை கடையில் வாங்கிக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்து உதவிவந்தான்.

எத்தனை நாட்களுக்கு கடைச்சாப்பாடு சாப்பிட முடியும். அக்காவுக்கு சிலவேளைகளில் கடைச்சாப்பாடு கள்ஒத்துக்கொள்ளாமல்வயிற்றோட்டமும்ஏற்பட்டுவிடும். அந்தவேளை கந்தசாமி இளைய மகளான கார்த்திகாவை அக்காவுக்கு உதவுவதற்கு இடைக்கிடை அனுப்புவான்.

அக்காவுக்கு நோய்வரவர அதிகரிக்க சாதாரண தேனீரை தயாரிக்ககூட இயலாத தன்மை ஏற்பட்டு விட்டது. அக்கா இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தது போல கந்தசாமி உன்ரை மகள் கார்த்திகாவை நான் என்ரை பிள்ளையைப் போல பாப்பன், அவளை இங்கை கொண்டுவந்து விடன். எனக்கு உந்தக் கடைச் சாப்பாடு ஒத்துவருதில்லை. அவளும் நல்லா சமைப்பாள் எண்டு கேள்விப்பட்டன். மாதம் பத்தாயிரம் அவளுக்குக் கொடுக்கிறன். நீ என்ன சொல்லுறா என கந்தசாமியைப் பார்த்து பரிவுடன் அக்கா கதைத்தா.

கந்தசாமிக்கு தூக்கி வாரிப்போட்டது. அன்றைய தனம் அக்காவா இப்படியெல்லாம் கதைக்கிறா? தனது தகப்பனுக்கும், தனக்கும் போத்தலில் தேனீர் தந்து வெளியே இருக்க வைக்கவேணுமெண்டு, தனது தாயாருடன் வாதிட்டு சண்டைசெய்த தனம் அக்காவா இப்படி கதைக்கிறா என யோசிக்க கந்தசாமிக்கு சிரிப்பாக வந்தது. ஆனாலும் அதையெல்லாம் வெளிக்காட்டாமல், அக்காவுக்குத் துணையாக அடுத்த நாளே இளையமகள் கார்த்திகாவை கந்தசாமி அக்காவீட்டுக்கு அழைத்து வந்தான்.

கந்தசாமியின் செயலைப் பார்த்த அக்காவுக்கு கண்கலங்கிவிட்டது. கந்தசாமி, முந்தி ஒரு காலத்திலை உங்களை நாங்களெல்லாம் ஒதுக்கி வைச்சனாங்கள். நீங்கள் தேத்தண்ணி குடிக்க போத்தலையும், சிரட்டையையும் நீட்டினனாங்கள். நாங்களெல்லாம் வானத்திலை இருந்து குதிச்சு வந்த தேவசாதியெண்டும், நீங்களெல்லாம் நரகத்து முள்ளுகளென்றும் எண்ணி இருந்தனாங்கள். உங்களுக்குள்ளை இருந்த நல்ல குணங்களை நாங்கள் நினைச்சும் பாக்கேல்லை.

எங்கடை ஆக்களிலை இப்பவும் கனபேர் உந்த வறட்டுக் குணத்தோடைதான் சீவிக்கினம். நீயும், உன்ரை மகளும் இல்லையெண்டா நான் என்ன பாடுபட்டிருப்பன் கந்தசாமி. உன்ரை மகள் கார்த்திகா இனி எங்களிலை ஒருத்தி. என்ரை பிள்ளையளிலை ஒருத்தி அவள்.

அவளை கட்டிவைக்க சீதனபாதனம் ஏதுமில்லையெண்டு யோசியாதை. அவளுக்கு சீதனம் கொடுத்த நல்ல பெடியனா பாத்து கட்டி வைக்கிறது என்ரைவேலை கந்தசாமி. உன்ரை முகமனுக்காக இதெல்லாம் சொல்லுறனெண்டு நீ நினைக்காதை. நான் முந்தின தனம் அக்கா இல்லை, புதுத்தனம் அக்கா கதைக்கிறன் கந்தசாமி.... புதுத்தனமக்....... தொடர்ந்து கதைக்க முடியாது தடுமாறிய அக்காவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. அதைப்பார்த்த கார்த்திகாவும் தாங்கமுடியாது அக்காவை ஓடிப்போய் கட்டி அணைத்து அழுதாள்.

இதையெல்லாம் பார்த்த கந்தசாமியும் ஏதும் செய்வதறியாது கலங்கி அழுதபடி இருந்தான்.

அக்காவைப்பற்றியமிகுந்தமனக்கவலைகளுடன் திருகோணமலையிலிருந்து அவசரமாக யாழ்ப்பாணம் சென்ற நான், மிகவும் மனநிம்மதியுடன் மீண்டும் வீடு திரும்பினேன்.

(யாவும் கற்பனை)

**ஆக்கம்**
**ஷெல்லிதாசன்**
**திருகோணமலை**


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**


**Page I** English for all **Sunday the 07th May 2023**

**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com



# Making predictions

FICTION

We can predict what is going to happen in a text based on clues in the words and pictures, and on what we already know.



**Read the passage.**



Circle what the goats did to the children.

Underline why Mr. Kent was pleased with the goats.

Put a box around where Mr. Kent was when he saw the yabbies.

## The Goats

Lots of children heard about the goats and came to visit. Morecambe and Wise put their heads down and butted them in all directions.

The children thought it was great fun—that is, the ones that got away did. The children who didn't escape went home crying and told their mothers.

Mr. Kent smiled when he saw what was happening. "These goats are as good as a watchdog," he said. "This'll put a stop to whoever is taking our strawberries."

Mr. Kent wasn't so happy the next day.

He was at the dam. He leaned forward, then called excitedly to Mrs. Kent, "We've got some baby yabbies! Hurray!"

**Highlight** how Mr. Kent was standing when he looked at the yabbies.

**Color** why Mr. Kent was excited.




**Circle the correct answers.**

1 What three predictions can you make about what will happen next in the story?

- **a** One of the goats will butt Mr. Kent.
- **b** Mr. Kent will push the goats into the dam.
- **c** Mr. Kent will be angry.
- **d** Mrs. Kent will push Mr. Kent into the dam.
- **e** Mr. Kent will get wet.
- **f** The goats will eat the baby yabbies

2 What evidence is there in the text to support your predictions? Select two answers.

- **a** Mr. Kent was excited about the yabbies.
- **b** Some of the children got away from the goats.
- **c** The goats have shown that they like to butt people.
- **d** Someone had been stealing the Kents' strawberries.
- **e** The children didn't like it when the goats butted them.
- **f** Mr. Kent was in the right position to get butted.



"konwledge isn't free. You have to pay attention"

# Figurative language

FICTION

An author uses figurative language to encourage the reader's imagination. *Alliteration* repeats consonant sounds. *Onomatopoeia* imitates sounds. *Simile* compares one thing to another using the words 'like' or 'as'. *Metaphor* also makes comparisons but without using 'like' or 'as'

**Read the passage.**



Underline the simile in paragraph 1.

Circle the animal that Great Grandpa compares Great Grandma to.

## Getting rid of wrinkles


Tessa's Great Grandma Em had a face like a sheet of scrunched up newspaper. Great Grandpa Alfred teased her lots.

"You look like a hippopotamus that has been bathing in the river too long," he said at breakfast.

"The bags under your eyes could carry the treasure from a sunken pirate ship," he said at lunch.

**Color** the simile in paragraph 2.

**Highlight** the metaphor in paragraph 3.



**Circle the correct answers.**

1 What is Great Grandma Em's face compared to?

- a a sheet
- b a hippopotamus
- c a newspaper
- d a sheet of scrunched up newspaper

2 The figure of speech in paragraph 1 is a simile. Which word tells us this?

- a a
- b like
- c of
- d sheet

3 What does the simile in paragraph 1 suggest about Great Grandma Em's face? Her face is …

- a very thin.
- b quite hard.
- c full of wrinkles.
- d very smooth.

4 What does Great Grandpa Alfred compare the bags under Great Grandma's eyes to? Bags that can carry …


- a pirate treasure.
- b pirates.
- c ships.
- d sunken ships.

5 The figure of speech in paragraph 3 is a metaphor. What does it suggest about the bags under Great Grandma's eyes? The bags under her eyes are …

- a colorful.
- b valuable.
- c large.
- d sparkly.

# Making connections

Linking a text to other texts you have read is a great way to build understanding. Look for key words and phrases in the texts to make the connections.



**Read the passages.**

## Tokyo Techno

Anita unfolded a map of Japan.

"It says the capital of Japan is Tokyo. That's where we're going." She read on, "Japan is made up of four main islands and over 3000 little ones." Anita marked Tokyo, on the island of Honshu, with a red spot.

In the corner of the map Jason pointed to a white flag with a red circle in the middle. "That's the Japanese flag," he said. "The word Japan actually means *source of the sun*."

In each text, circle Japan's capital city.

In each text, **color** the island on which the capital city stands.

In each text, underline the number of islands that make up the country of Japan.

In each text, **highlight** the words that tell what the word *Japan* means.

Japan is a country in the Pacific Ocean. It consists of four main islands and thousands of smaller ones. The capital city, Tokyo, is on the island of Honshu.

Japan is known as the *Land of the Rising Sun*. This is because its name means *sun origin*.

Japan is on the Pacific Ring of Fire. It experiences over 1500 earthquakes every year. In 2011, a huge earthquake and tsunami caused a lot of damage.

**Circle the correct answer for each question.**

1 Which information appears in both texts?

- **a** Japan consists of many islands.
- **b** The capital city of Japan is Tokyo.
- **c** Japan is on the Pacific Ring of Fire.
- **d** Tokyo is on the island of Honshu.
- **e** Japan often experiences earthquakes.
- **f** Four of Japan's islands are bigger than the others.
- **g** Japan is known as the *Land of the Rising Sun*.
- **h** The word Japan means *where the sun comes from*.



# Julian Assange



Julian Paul Assange (/əˈsɑːnʒ/ ə-SAHNZH;[3] né Hawkins; born 3 July 1971) is an Australian editor, publisher, and cypherpunk activist. He was convicted in Australia for hacking in 1996.[4][5][6] He founded WikiLeaks in 2006; the organisation came to international attention in 2010 when it published a series of leaks provided by U.S. Army intelligence analyst Chelsea Manning.[a] After the 2010 leaks, the United States government launched a criminal investigation into WikiLeaks.[7]

In November 2010, Sweden issued a European arrest warrant for Assange over allegations of sexual assault,[8] which he denied and said that the warrant was a pretext for a further extradition to the United States over his role in the publication of secret US military documents.[9][10] After losing his battle against extradition to Sweden, he breached bail and took refuge in the Embassy of Ecuador in London in June 2012.[11] He was granted asylum by Ecuador in August 2012[12] on the grounds of political persecution and fears he might be extradited to the United States.[13] Swedish prosecutors dropped their investigation in 2019, saying their evidence had "weakened considerably due to the long period of time that has elapsed since the events in question".[14]

On 11 April 2019, Assange's asylum was withdrawn following a series of disputes with Ecuadorian authorities.[15] The police were invited into the embassy and he was arrested.[16] He was found guilty of breaching the Bail Act and sentenced to 50 weeks in prison.[17] The United States government unsealed an indictment charging Assange with conspiracy to commit computer intrusion related to the leaks provided by Manning.[18] In May 2019 and June 2020, the United States government unsealed new indictments against Assange, charging him with violating the Espionage Act of 1917 and alleging a history of conspiring with hackers.[19][20] Response to the indictments has been mixed.[21][22][23] Editors from newspapers have been less critical or supportive of the hacking charge,[24][23][25] but joined with press freedom organisations to criticise the government's decision to charge Assange under the Espionage Act, characterising it as an attack on freedom of the press.[26][27]

Assange has been confined in Belmarsh, a category A prison, in London since April 2019.[28] On 4 January 2021, UK District Judge Vanessa Baraitser ruled against the United States' request to extradite Assange, citing concerns over Assange's mental health and risk of suicide.[29] On 6 January 2021, Assange was denied bail, pending an appeal by the United States.[30] On 10 December 2021, the High Court in London ruled that Assange could be extradited to the US to face the charges.[31] On 17 June 2022, Home Secretary Priti Patel approved the extradition.[32] On 1 July 2022, it was announced that Assange had formally appealed against the extradition order.[33]

## Early life

Assange was born Julian Paul Hawkins on 3 July 1971 in Townsville, Queensland,[34][35] to Christine Ann Hawkins (b. 1951),[36] a visual artist,[37]: 34 and John Shipton, an anti-war activist and builder.[38] The couple separated before their son was born.[38] When Julian was a year old, his mother married Brett Assange,[39][40][41] an actor with whom she ran a small theatre company and whom Julian Assange regards as his father (choosing Assange as his surname).[35][42] Christine and Brett Assange divorced around 1979. Christine then became involved with Leif Meynell, also known as Leif Hamilton, whom Julian Assange later described as "a member of an Australian cult" called The Family. Meynell and Christine Assange separated in 1982.[34][37][43]

Julian Assange had a nomadic childhood, living in more than 30 Australian towns and cities by the time he reached his mid-teens,[44][45] when he settled with his mother and half-brother in Melbourne.[39] Assange was involved in the Melbourne rave scene, assisting in installing an internet kiosk at Ollie Olsen's club night Psychic Harmony where he was nicknamed "Prof".[46] Assange attended many schools, including Goolmangar Primary School in New South Wales (1979–1983)[42] and Townsville State High School in Queensland[47] as well as being schooled at home.[40]

Assange studied programming, mathematics, and physics at Central Queensland University (1994)[48] and the University of Melbourne (2003–2006),[39][49] but did not complete a degree.[50][51]

## Hacking, programming, and early activism

By 1987, aged 16, Assange had become a skilled hacker[52][53][54] under the name Mendax,[40][55][56][57][58] taken from Horace's splendide mendax (nobly lying,[59] nobly untruthful,[51][60] noble liar[61] or delightfully deceptive).[62][63] Around this time, the police raided his mother's home and confiscated his equipment. According to Assange, "it involved some dodgy character who was alleging that we had stolen five hundred thousand dollars from Citibank." He wasn't charged and had his equipment returned, but "decided that it might be wise to be a bit more discreet."[40]

Assange had a self-imposed set of ethics: he didn't damage or crash systems or data he hacked, and he shared information.[64] The Sydney Morning Herald later opined that he had become one of Australia's "most notorious hackers",[65] and The Guardian said that by 1991 he was "probably Australia's most accomplished hacker".[56] Assange's official biography on WikiLeaks called him Australia's "most famous ethical computer hacker",[66] and the earliest version said he "hacked thousands of systems, including the Pentagon" when he was younger.[66][67][68]

He and two others, known as "Trax" and "Prime Suspect", formed a hacking group they called "the International Subversives".[40][53][55][56] According to NPR, David Leigh, and Luke Harding, Assange may have been involved in the WANK (Worms Against Nuclear Killers) hack at NASA in 1989, but this has never been proven.[69][4][37]: 42 The 2010 Swedish television documentary WikiRebels, which was made with Assange's cooperation, also hinted he was involved.[39]

In mid-1991, the three hackers began targeting MILNET,[67] a secret data network used by the US military, where Assange found reports he said showed the US military was hacking other parts of itself.[62] Assange found a backdoor and later said they "had control over it for two years."[56][67] Assange wrote a program called Sycophant that allowed the International Subversives to conduct "massive attacks on the US military".[39] The International Subversives regularly hacked into systems belonging to a "who's who of the U.S. military-industrial complex"[70][62] like the Australian Federal Police, Australia National University, NASA, the Department of Defence,[71] the Stanford Research Institute, Lawrence Livermore National Laboratory,[72][62] and the Los Alamos National Laboratory.[56][40][67][63]

The three hackers discovered that the Australian Federal Police had set up an investigation called Operation Weather that targeted the group. The hackers tried to monitor the investigation.[40][62][73] In September 1991, Assange was discovered hacking into the Melbourne master terminal of Nortel, a Canadian multinational telecommunications corporation.[40][51][63] Another member of the International Subversives turned himself and the others in,[55][62] and the Australian Federal Police tapped Assange's phone line (he was using a modem), raided his home at the end of October[74] and eventually charged him in 1994 with 31 counts of hacking and related crimes.[40][56]

In December 1996, facing 10 years in prison, he struck a plea deal[6] and pleaded guilty to 24 hacking charges (the others were dropped); he was ordered to pay a fine of A$2,100 and released on a good behaviour bond.[4][56][75] The judge called the charges "quite serious" and initially thought a jail term would be necessary[73] but ultimately sentenced Assange to a fine and a good behaviour bond because of his disrupted childhood and the absence of malicious or mercenary intent, which the prosecution said was "simply an arrogance and a desire to show off his computer skills".[56][76][75][73] According to The New Republic, "the experience set him on the intellectual path" leading him to found WikiLeaks.[72]

In 1993, Assange provided technical advice and support to help the Victoria Police Child Exploitation Unit to prosecute individuals responsible for publishing and distributing child pornography.[58] His lawyers said he was pleased to be able to assist, emphasising that he received no personal benefit for this and was not an informer. His role in helping the police was brought up during his 1996 sentencing on computer hacking charges.[77][78]

In the same year, he took over running one of the first public Internet service providers in Australia, Suburbia Public Access Network when its original owner, Mark Dorset, moved to Sydney.[39][79] He joined the cypherpunk mailing list in late 1993 or early 1994.[80] An archive of his cypherpunks mailing list posts[81] is at the Mailing List Archives. He began programming in 1994, authoring or co-authoring the TCP port scanner Strobe (1995),[82][83][non-primary source needed] patches to the open-source database management system PostgreSQL (1996),[84][85][non-primary source needed] the Usenet caching software NNTPCache (1996),[86][non-primary source needed] the Rubberhose deniable encryption system (1997)[87][88] and Surfraw, a command-line interface for web-based search engines (2000).[89][non-primary source needed] During this period of time he also moderated the AUCRYPTO forum,[90] ran Best of Security which was a website "giving advice on computer security" that had 5,000 subscribers in 1996,[37]: 45 and contributed research to Suelette Dreyfus's Underground (1997), a book about Australian hackers including the International Subversives.[62][91] In 1998, he co-founded the "network intrusion detection technologies" company Earthmen Technology which developed linux kernel hacking.[73]

Assange stated that he registered the domain leaks.org in 1999, but "didn't do anything with it".[73] He did publicise a patent granted to the National Security Agency in August 1999, for voice-data harvesting technology saying "This patent should worry people. Everyone's overseas phone calls are or may soon be tapped, transcribed and archived in the bowels of an unaccountable foreign spy agency."[90]

## WikiLeaks

Assange at the "New Media Days 09" in Copenhagen, November 2009

Assange and a few others established WikiLeaks in Iceland in 2006.[39] Assange became a member of the organisation's advisory board[92] and described himself as the editor-in-chief.[93] From 2007 to 2010, Assange travelled continuously on WikiLeaks business, visiting Africa, Asia, Europe, and North America.[40][45][94][95][96] During this time, the organisation published internet censorship lists, leaks,[97] and classified media from anonymous sources. The publications include revelations about drone strikes in Yemen, corruption across the Arab world,[98] extrajudicial executions by Kenyan police,[99] 2008 Tibetan unrest in China,[100] and the "Petrogate" oil scandal in Peru.[101]

Assange and Daniel Domscheit-Berg at the 26C3 in Berlin, December 2009

WikiLeaks' international profile increased in 2008 when a Swiss bank, Julius Baer, tried unsuccessfully to block the site's publication of bank records.[102] Assange commented that financial institutions ordinarily "operate outside the rule of law", and received extensive legal support from free-speech and civil rights groups.[103][104] Over the next several years, WikiLeaks continued publishing news leaks.

## Manning leaks

The material WikiLeaks published between 2006 and 2009 attracted various degrees of international attention,[105] but after it began publishing documents supplied by U.S. Army intelligence analyst Chelsea Manning, WikiLeaks became a household name.[citation needed]

In March 2010, a member of WikiLeaks using the handle "Ox", widely believed to be Julian Assange, talked to Chelsea Manning by text chat while she was submitting leaks to WikiLeaks




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04


# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 23 சனிக்கிழமை 06.05.2023 கதிர் 50

## பிரிட்டன் மன்னருடன் ரணில் நேரில் சந்திப்பு



பிரிட்டனின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் பங்கேற்புடன் இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

2

## வடக்கு, கிழக்கு உட்பட

# 4 மாகாண ஆளுநர்களை பதவி விலக அறிவித்தல்

## ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை







நான்கு மாகாணங்களின் ஆளுநர்களை உடனடியாகப் பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ளது எனக் காலைக்கதிர் அறிந்தது.

வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண ஆளுநர்களையே இவ்வாறு பதவி விலகும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி ஒருவர் பதவியேற்றதும் ஆளுநர்கள் பதவி விலகுவது சம்பிரதாயம் என்றும், அது பிரதமர் வெளியேறிய பின்னர் அமைச்சரவை கலைவதைப் போன்றதாகும் என்றும் ஜனாதிபதி செயலகத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் மேற்படி சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து ஆளுநர்கள் பதவி விலகாததால் அவர்கள் சுயேச்சையாகப் பதவி விலகும் வரை ஜனாதிபதி சில காலம் காத்திருந்தார் என்றும் ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் கூறினார்.

சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகிய பின்னர் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி பிரிட்டனில் இருந்து நாடு திரும்பியதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (02)





## ஐ.தே.க. செயலாளர் வவுனியா வருகை

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தலைமையில் வவுனியாவில் இன்று விசேட கூட்டம் இடம்பெற்றது.

வவுனியா, மில் வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் அடுத்தகட்டதிட்டங்கள் குறித்தும் மாவட்ட மட்ட கட்டமைப்பை பலப்படுத்தல் தொடர்பாகவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கட்சியை மாவட்ட மட்டத்தில் மறுசீரமைத்து மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (100)

## வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த

# அரச உத்தியோகத்தர்களை மீளவும் இணைக்கும் சுற்றறிக்கை திங்கள்!



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள அரச உத்தியோகத்தர்களை மீளசேவையில் இணைத்துக் கொள்வதற்கான சுற்றறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

உள்ளூராட்சிசபைகள் மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது, இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைத் தாக்கல்செய்த அரச ஊழியர்களை மீளவும் சேவையில் இணைக்கக் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி, அவர்கள் போட்டியிடவுள்ள தேர்தல் தொகுதியில் உள்ள அரச அல்லது பகுதிநிலை அரச நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டிருப்பின், அந்தத் தொகுதிக்கு வெளியே இடமாற்றம்செய்து கடமையில் ஈடுபடுவதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியது.

இந்தநிலையில், அது தொடர்பான சுற்றறிக்கை நாளைமறுதினம் வெளியிப்படவுள்ளதுடன்,

இதனூடாக, அவர்களுக்கான வேதனம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஜனாக்க வக்கும்புர மேலும் தெரிவித்துள்ளார். (02)

# 10 பேர் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவில் இருந்து இன்று அதிகாலை படகு மூலம் சென்ற 10 பேர் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் கோரியுள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்ட இவர்கள் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தை அண்டிய 3ஆவது தீடையில் இறக்கியுள்ளனர்.

இந்தியாவின் ஆளுகையில் உள்ள இந்த 3ஆவது தீடையில் இருந்த இவர்களை தமிழக மீனவர்கள் அவதானித்து தமிழகப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிசார் கரையோர காவல்படையினரின் துணையுடன் அவர்களை மீட்டனர்.

மீட்கப்பட்டவர்கள் 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். 4 பெண்கள்,

2

# கந்தரோடையில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், கந்தரோடையில் பிக்கு ஒருவர் காணி வாங்கி அங்கு விகாரை ஒன்றை அமைக்க உள்ளார் என்று கூறப்படும் நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

நாளை ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசியப் பேரவை என்கிற அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கந்தரோடையின் வரலாற்றை சிங்கள பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் அங்கு பௌத்த விகாரை அமைப்பதற்கான முற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் முழு அனுசரணையுடன் தமிழ்த்தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்புச் செயற்பாடுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் – என்றுள்ளது போராட்டம் கந்தரோடையில் காலை 10 மணிக்கு இடம்பெறும் என்று பேரவையின் வலிகாமம் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# காப்புறுதிப் பணத்தைப் பெற மனைவி திட்டமிட்டு கொலை

## 24 வயதுக் கணவன் கைது



பிட்டிகல பொலிஸார் 24 வயதான காணவரைக் கைது செய்துள்ளனர். அவர் தனது மனைவியைக் கொன்றார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மனைவியின் பெயரிலிருந்த காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்காக அவர் மனைவியைக் கொலை செய்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலை செய்யப்பட்ட பெண் வட்டகேனா, டியகித்துள்கண்ட என்ற இடத்தைச்சேர்ந்தவரான நிரோஷா உதயங் கனி (வயது 40). இவர் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்தார். தனது பெயரில் 4 ஆயுள் காப்புறுதிகளை பெற்றிருந்தார். அவற்றின் மொத்தப் பெறுமதி 50 லட்சம் ரூபாய்.

அவரது கணவனான 24 வயது சந்தேகநபர், தனது நண்பனுடன் சேர்ந்து நிரோஷாவை வாடகை வண்டியின் கீழே பலவந்தமாகத் தள்ளிக் கொன்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலைக்கு உதவுவதற்காக நண்பனுக்கு 20 லட்சம் ரூபாய் வழங்குவதாக சந்தேகநபர் உறுதியளித்துள்ளார்.

மனைவியின் பெயரில் உள்ள ஆயுள் காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்காகவே நண்பனுடன் இணைந்து இந்தக் கொலையைச் சந்தேகநபர் புரிந்துள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மனைவி விபத்தில் இறந்துபோனார் என்பதைப் போன்று சோடித்து காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்கே சந்தேகநபர் திட்டமிட்டு, மனைவியை நிலத்தில் அழுத்திப் பிடித்திருக்க அவரது நண்பன் அவர் மீது வாடகைவண்டியை மோதி, அவர் மீது ஏற்றிக் கொலை செய்துள்ளார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் காலியைச் சேர்ந்தவர்.

வேலை ஏதுமற்றவர் என்றும் பொலிஸார் அறிக்கையிட்டுள்ளனர்.

# வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வீரசேகர தலைமையிலான குழு



வவுனியா, நெடுங்கேணி + வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் இன்று விஜயம் செய்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை

2

# இந்தியச் சுற்றுலாப் பயணிகள் 20 லட்சம் பேரை ஈர்க்க இலக்கு

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு



இந்த ஆண்டில், 20 இலட்சம் இந்தியச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளதாக இலங்கையின் சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை சுமார் 530 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சுற்றுலாத்துறையின் மூலம் ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 482.3 மில்லியனாக இருந்தது.

இந்தநிலையில் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றுலாத்துறையில், மொத்தம் 3 பில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஹரின் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார். (02)

## யானை தாக்கி ஒருவர் சாவு

(எப்.முபாரக்)

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோமரங்கடவல பகுதியில் யானை தாக்குதலினால் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்தகாமினி வத்தேவெவ (44 வயது) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார். கோமரங்கடவல ரிதீபுர பகுதியில் கடந்த ஒரு வார காலமாக

2

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 150 கி. கஞ்சா கைப்பற்றப்பட்டது

## இராமேஸ்வரத்தில் சம்பவம்

இலங்கைக்கு கடத்தவிருந்த கஞ்சாவை தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் தாம் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராமேஸ்வரம் தேவஸ்தானத்தில் வாகன தரிப்பிடத்தில் கார் ஒன்று மர்மமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய புலனாய் பிரிவிற்கு கிடைத்த தக வலை அடுத்து, அந்தக் காரைச் சோதனையிடுவதற்குப் பொலிஸார் காத்திருந்தனர். ஆனால் நீண்ட நேரமாகியும் எவரும் வரவில்லை.

சந்தேகமடைந்த பொலிஸார் காரை மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று பரிசோதித்த போது கார் முழுவதும் பொதி செய்யப்பட்ட 158 கிலோ கஞ்சா மறைக்கப்பட்டிருந்ததைப் கண்டுபிடித்தனர். இவை இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காக எடுத்து வரப்பட்டவை என்று அவர்கள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மதிப்பு இலங்கை மதிப்பில் சுமார் 4 கோடி ரூபாவாக இருக்கும் என இந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

மர்மமான முறையில் தரித்து நின்ற காரின் உள்ளே வெடிகுண்டுகள் மற்றும் வெடிபொருள் இருப்பதாக வதந்தி கிளம்பியை அடுத்து இராமேஸ்வரத்தில் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

பொலிஸார் காரை உடைத்து அதற்குள் வெடிகுண்டுகள் எவையும் இல்லை என்பதை நிரூபித்துப் பொதுமக்களின் அச்சத்தை போக்கினர்.



# நூல் அறிமுக விழா





(நூருள் ஹுதா உமர்)

பன்னூலாசிரியர் கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதிய இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு எனும் நூலின் அறிமுக விழாவும் விசேட உரையும் இன்று மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா தலைமையில் நடைபெற்றன.

இவ்விழாவில், அம் பாறை மாவட்ட றாபிதத்துன் நளீமியின் தலைவரும் அம்பாறை, மூத்த சுற்றாடல் உத்தியோகத்தருமான அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். இஸ்ஹாக் நளீமி வரவேற்புரையையும் அறிமுக உரையையும் நிகழ்த்தினார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை மூத்த பேராசிரியர் எம். றமீஸ் அப்துல்லாஹ் நூல் பற்றிய அறிமுகத்தை நிகழ்த்தினார். இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்க ளிப்பு எனும் தலைப்பில் கலாநிதி ரவூப் ஸெய்ன் விசேட உரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி எம்.பி.எம். நவாஸ், பல்வேறு வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், துறைசார் பிரமுகர்கள், அதிபர்கள், ஆசி ரியர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதானிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ருவாண்டா, கானா தலைவர்களுடன் லண்டனில் ஜனாதிபதி சந்தித்து பேச்சு

பிரித்தானியாவின் மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்காக பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு ருவாண்டா மற்றும் கானா நாட்டு அதிபர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ருவாண்டா அதிபர் போல் ககாமேயுடனான ஜனாதிபதியின் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான விவசாயம், சுகாதாரம் உள்ளிட்ட பலதுறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. எதிர்கால நடவடிக்கைகளுக்காக இரு நாட்டு அமைச்சர்களின் சந்திப்பு குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கவனம் செலுத்தியதுடன், இயற்கைப் பேரிடர்களுக்குத் துரித நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ருவாண்டா படையினருக்குப் பயிற்சி அளிக்க இலங்கை பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி விக்ரமசிங்க இந்தச் சந்திப்பில் உடன்பாடு தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக கான நாட்டு அதிபர் நானா அடோ டான்க்வா அகுஃபோ-அடோவையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார். இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர்.

# 1000 பேருக்கு உணவு





வெசாக் தினத்தை முன் னிட்டு வவுனியா பொலிசாரால் 1000 பேருக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வெசாக் தினமானது இன்றும் நாளையும் நாடு முழுவதும் பௌத்தர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் வெசாக் தினத்தில் வவுனியா தலை மைப் பொலிஸ் நிலையத்தால் சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் காத்தார் சின்னக்குளம் சிவில் பாதுகாப்பு அமைப்பு ஊடாக ஆயி ரம் பேருக்கு உணவு வழங்கப் பட்டது. ஏ9 வீதியால் பயணித்த பலரும் தமது வாகனங்களை நிறுத்தி உணவினைப் பெற்றுச் சென்றனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் முன்பாக பௌத்த, இந்து மத குருமார்களின் ஆசிர்வாதத்துடன், இந் நிகழ்வு தொடங்கி வைக்கப்பட் டது. இதில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, காத்தார் சின்னக்குளம் கிராம அலுவலர், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், காத்தார் சின்னக்குளம் சமுதாய பொலிஸ் குழுவினர் எனப் பல ரும் கலந்துகொண்டனர். (100)

## பிரிட்டன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு வாழ்த்துக்களைக் கூறிய ஜனாதிபதி, அவருடன் சுமுகமாகக் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

இம்மாநாட்டில் இளையோரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலான கல்வி மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்குப் பொதுநலவாய அமைப்பு விரிவான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் வலியுறுத்தினார்.

டிஜிட்டல் மயமாக்கலின் ஊடாக தொடர்பாடல்களை வலுப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி கோரினார். (02)

## வெடுக்குநாறி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளப் பிரதிஷ்டை செய்ய வவுனியா நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், கடந்த 28 ஆம் திகதி ஆலயத்தில் விக்கிரகங்கள் மீளப் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் இன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் பார்வையிட்டனர்.

சரத் வீரசேகர எம்.பியுடன் சிங்கள மக்களும், நெடுங்கேணிப் பொலிஸாரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

## 10 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 ஆண்கள் மற்றும் 3 சிறுவர்கள் அவர்களில் அடங்கியுள்ளனர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் அனைவரும் மண்டபம் முகா மில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் மேலும் ஒரு படகில் தமிழ்நாடு நோக்கிப் பயணிக்க முற்பட்ட 6 பேர் மன்னார் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தொடரும் அடை மழையால் நீர்கொழும்பில் வெள்ளம்



கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வந்த அடை மழை காரணமாக நீர்கொழும்பு கட்டுவ, புவக்வத்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வீடு களுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது.

சிலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்களுடைய வீடுகளில் தங்கி உள்ளனர்.

பலத்த மழை பெய்யும் ஒவ்வொரு சமயத்திலும் இந்த பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் தெப்பா எல ஆறு பெருக்கெடுத்து தங்களது வீடுகளுக்குள் வெள்ளம் வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## யானை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யானையின் அட்டகாசம் அதிகரித்து வந்த நிலையில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இணைந்து கிராம மக்கள் யானையை விரட்டுவதற்கு சென்றுள்ளனர்.

அப்போதே யானை குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியதாகவும் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்..

உயிரிழந்தவரின் சடலம் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோமரங்கடவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏழாலையில் வெள்ளியன்று 7 பவுண் நகைகள் திருட்டு



சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 15 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

அதிகாலைவேளை வீட்டில் இருந்தவர்கள் உறங்கிய நிலையில் வீட்டின் ஜன்னல் கம்பியை வளைத்துக் கொள்ளையர்கள் உள்நுழைந்துள்ளனர்.

வீட்டில் இருந்த தாலிக் கொடி உட்பட சுமார் 15 பவுண் நகைகளை அவர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் இரண்டு நாய்கள் இருந்தன. அவற்றிற்கு மயக்க மருந்து விசிறிய பின்னரே திருடர்கள் உள்நுழைந்துள்ளனர் என்று வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கதிர்காம பாதயாத்திரை இன்று சந்நிதியிலிருந்து தொடங்கியது

## 43 தினங்கள் 815 கி.மீ. நடைப்பயணம்










(வி.ரி. சகாதேவராஜா)

இந்துக்களின் பாரம்பரியப் பேராலயமான கதிர்காமத்திற்கான பாதயாத்திரை இன்று யாழ். மாவட்டத்திலிருந்து தொடங்கியது. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமை யில் காலை 7.30 மணியளவில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து விசேட பூஜையுடன் அரோஹரா கோம் முழங்க யாத்திரை தொடங்கியது. யாத்திரீகர்களின் உறவினர்களும் வந்து ஆரத் தழுவி கண்ணீர் மல்க வழியனுப்பிவைத்தனர். பாதயாத்திரை தொடர்பான பதாகைகள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்தன.

கதிர்காமத்தில் கன்னிக்கால் நட்ட தினத்தில் இந்தப் பாதயாத்திரை தொடங்கியது.

வடக்கு கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை, மொனராகல என 7 மாவட்டங்களையும் ஊடறுத்து இந்தப் பாத யாத்திரை பயணிக்கும். 55 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்துகடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிக நீண்ட தூர பக்தி யாத்திரையாகும்.

இம்முறை கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவ காலம் ஒருமாத காலம் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதால் பாதயாத்திரைக் காலத்தை 43 நாட்களாக சுருக்க வேண்டி நேரிட்டது என்று ஜெயாவேல் சாமி தெரிவித்தார்.

23 வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரை கதிர்காமக் கந்தனாலய கொடியேற்றத் தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

சந்நதியில் இடம்பெற்ற விசேட வழிபாட்டைத் தொடர்ந்து சந்நிதி மோகன் சுவாமியால் வேலாயுதம் கதிர்காம பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது..

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயா வேல்சாமி அணியில் வழமையாக பயணிக்கும் நூறு பக்தர்களுடன் கதிர்காமம் நோக்கிப் புறப்படும். பாதய–ாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமைபோல பெறப்பட்டிருப்பதாக பாதயாத்திரைக்குழுத்தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

இதேவேளை கதிர்காம ஆடி வேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் வைபவம் நேற்று மே 6ஆம் திகதி நடைபெற்றது. ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை 4ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**வரலாறு**

1972ஆம் ஆண்டில் அமெரிக்க முருகபக்தர் பற்றிக்ஹரிகன் கதிர்காம பாதயாத்திரையை ஒழுங்கமைக்கப்பட்ட குழுவடிவில் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக 1978இல் அவர் ஓய்வுபெற்றதும் அவர் தாங்கி வந்த வேலை காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி மகேஸ்வரனிடம் ஒப்படைத்தார். அன்றிலிருந்து 21 வருடங்களாக வேல்சாமி தலைமையில் பாதயாத்திரை நடைபெற்றுவந்தது. கடந்த இரண்டு வருடங்களாக ஜெயா வேல்சாமி இப்பணியில் ஈடுபட்டு வருகிறார். தொடக்கத்தில் வெருகலிலிருந்து இது இடம்பெற்றது.

நாட்டில் போர் முடிவுக்கு வந்த பிற்பாடு 2012 முதல் சந்நிதியிலிருந்து இப்பாதயாத்திரை தொடங்கப்படுகின்றது.





## காங்கேசன் சாரணர் மாவட்டத்துக்கு பதிய ஆணையாளர்

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்திற்கு புதிய ஆணையாளராக சங்கரப்பிள்ளை கிருபானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் கல்விக் கோட்டத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரான இவர் ஏப்ரல் 29 அன்று தனக்கான நியமனக் கடிதத்தினை பிரதம சாரண ஆணையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார்.

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் முன்னாள் ஆணையாளரது பதவிக் காலம் மார்ச் மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் புதிய ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# விரிவுரையாளர்கள் வெளியேற்றம் ஆட்டம் கண்டது பல்கலைக் கல்வி



இலங்கையில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளால் அவர்கள் வழமையைவிட அதிகமாக நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் எனவும், இதனால் பல்கலைக்கழக அமைப்பு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னேஹக்க தெரிவித்தார்.

கடந்த 5 வருடங்களைவிட கடந்த சில மாதங்களில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சடுதியாக நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் எனவும், அரசு உடனடியாகத் தலையிட்டு வெளிப்படையாகக் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளதாலும், அரச சேவைக்கு புதிதாக ஆட்களை இணைத்துக்கொள்ளாத அரசின் முடிவினாலும் பல்கலைக்கழகக் கல்வித்துறை பெரிதும் ஆட்டம் கண்டுள்ளது.

சில பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு ஆசிரியர்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள புதிய வரி விதிப்பு முறையால் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சுமார் 36 வீத வரிச்சுமைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆனால், அவர்கள் சம்பளத்திற்கு ஏற்றவாறு செலவுகளை நிர்வகித்தாலும், இந்த நியாயமற்ற வரிக் கொள்கையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்பு செலுத்திய வரித் தொகையைவிட மூன்று மடங்கு அதிகம் சுமையை எதிர்கொள்கின்றனர்.

இதன்படி, சில விரிவுரையாளர்களின் சம்பளம் மறை நிலைக்குச் சென்றுள்ளது எனவும், நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

# குளத்தை ஆக்கிரமித்து வேலி வவுனியா பொலிஸில் முறைபீடு

## கமநலத் திணைக்களம் வழங்கியது






வவுனியாவில் குளத்து நீரேந்து பகுதியை ஆக்கிரமித்து வேலியிடப்படுவதாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

வவுனியா மாவட்டம், பட்டாணிச்சூர் என்ற இடத்தில் உள்ளது புளியங்குளம். அதன் நீரேந்துப் பகுதி குருமன்காட்டை அண்மித்த மன்னார் வீதி ஓரம்வரை நீண்டிருக்கிறது.

இந்த நீரேந்துப் பகுதியில், பள்ளிவாசலை அண்டியுள்ள பகுதியில் ஏப்ரல் 30 அன்று இரவு இனந்தெரியாத சிலர் முட்கம்பி வேலியிட்டு ஆக்கிரமித்தனர். இது குறித்து தகவல அறிந்து கமநல சேவைத் திணைக்களத்தினர் அங்கு சென்றதை அடுத்து வேலை அடைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

வெசாக் தினத்தையொட்டிய அரச அலுவலகங்களுக்கு நான்கு நாட்கள் தொடர் விடுமுறை இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, வெள்ளிக்கிழமை முதல் இரவு நேரங்களிலும் ஆள் நடமாட்டம் குறைந்த நேரங்களிலும் மீண்டும் வேலை அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

இது குறித்து கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கவனத்திற்கு விவசாய அமைப்புக்கள் கொண்டு சென்றன. அரச நிலத்தை அத்து மீறிக் கையகப்படுத்தி வேலி அடைத்தமைக்கு எதிராக கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். (100)

# அம்பாறையில் சிறப்புற்ற வெசாக் கொண்டாட்டங்கள்







(பாறுக் ஷிஹான்)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் முழுவதும் வெள்ளிக்கிழமை இரவு கோலாகலமான கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பொது மக்களுக்கு தேனீர் மற்றும் பிஸ்கட் கடலை சோறு எனபன தானமாக வழங்கும் நிகழ்வுகளும் பரவலாக இடம்பெற்றன.

அம்பாறை மாவட்டம் கல்முனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, காரைதீவு ,சம்மாந்துறை, நகரப் பகுதிகளில் பெருமளவான வெசாக் கூடுகள் பல வர்ணங்களில் கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டன. பக்தி பாடல்கள் ஒலிபரப்பட்டதுடன் தானம் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வங்கிகள் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள், கடற்படையினர், தனியார் நிறுவனங்கள், அரச நிறுவனங்களின் ஏற்பாட்டில் தானம் வழங்கும் நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்றன.

இதுதவிர இராணுவத்தினரால் மல்வத்தை, கல்முனை பகுதிகளில் பிரமாண்டமான வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த வெசாக் கூடுகளை பார்வையிடுவதற்காக தமிழ், முஸ்லீம் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளதுடன் தானம் வழங்கும் நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

பிரதான வீதியினால் சென்ற பொது மக்களுக்கு பிஸ்கட் மற்றும் தேனீர் குளிர்பானம் என்பனவற்றையும் இராணுவத்தினர் தானமாக வழங்கினர்.

இதே வேளை பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை வெசாக் தின நிகழ்வினை முன்னிட்டு வெசாக் வெளிச்ச வீடுகளை தொங்க விட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் ,வைத்தியசாலைகளிலும் வெசாக் வெளிச்ச கூடுகள் பரவலாக காட்சி படுத்தப்பட்டிருந்தன.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யானை - மனித முரணுக்கு அவசரத் தீர்வு வேண்டும்

அம்பாறையில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்திருக்கிறார். அங்கு இதுபோன்று நிகழும் உயிரிழப்பு இது முதற்றடவையல்ல. இந்த ஆண்டின் முதல் காலாண்டிலேயே இவ்வாறு பலர் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் உயிரிழந்திருக்கிறார்கள். யானை – மனிதர்கள் இடையிலான முரண்பாடு இலங்கையில் அதிகரித்து வருவதன் காரணமாக இரு தரப்பிலுமே உயிரிழப்புக்கள் அதிகரித்திருக்கின்றன.

கடந்த ஆண்டில் மனிதர்களால் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கையும் யானைகளால் உயிரிழந்த மனிதர்களின் எண்ணிக்கையும் என்றும் இல்லாதவாறு உச்சத்தை எட்டியுள்ளது. கடந்த வருடம் 433 யானைகள் உயிரிழந்திருக்கின்றன. இவற்றில் அரைவாசிக்கும் மேலான யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டிருக்கின்றன. அதேபோன்று யானைகளால் 145 மனிதர்கள் கடந்த ஆண்டில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இது தவிர யானைகளால் ஏற்பட்ட பயிரழிவுகள் மிக அதிகம்.

இந்த ஆண்டில் தை முதலாம் திகதியில் இருந்து சித்திரை 28 வரையான காலப்பகுதிக்குள் மட்டும் 151 யானைகள் கொல்லப்பட்டுள்ளன என்று வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவற்றில் குறைந்தது 67 இறப்புக்கள் மனிதர்களின் நேரடித் தலையீட்டினால் ஏற்பட்டது. துப்பாக்கியால் சுட்டும் மின்சாரம் தாக்கியும்கூட யானைகள் கொல்லப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் தமது பயிர்களை நாசம் செய்யும் யானைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு அவற்றின் உணவிற்குள் வெடிகுண்டுகளைவைத்து அவற்றைக் கொல்வதும் நடக்கிறது.

பதிலுக்கு யானைகள் ஊர்களுக்குள் வருகின்றன. பல சமயங்களில் மனிதர்கள் அவற்றினால் கொல்லப்படுகின்றனர். அம்பாறை மாவட்டம் இந்த வகையில் மிக மோசமாகப் பாதிக்கப்படும் ஒரு இடமாக இருக்கின்றது. வயல்களில் அறுவடை செய்து வைத்த நெல்மூடைகள் அனைத்தையும் ஒரேயிரவில் யானைகள் கபளீகரம் செய்த சம்பவம் ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்துள்ளது. நெல் மூடைகளைத் தேடி ஊருக்குள் வந்து, அவை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள கட்டடங்களை உடைத்துத் தகர்த்து நெல்லை உறிஞ்சி ஒன்று மிச்சமில்லாமல் உண்டுவிட்டுச் சென்ற சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான இந்த மோதலைக் கட்டுப்படுத்த 1959 முதல் ஆட்சியாளர்கள் திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றார்கள். ஆனால், எவையும் வெற்றிபெறவில்லை. இந்தத் திட்டங்ளால் இழப்புக்களும் மோதலும் குறைவதற்குப் பதில் இன்னும் அதிகரித்தே சென்றிருக்கின்றன. 2020 புதிய திட்டம் ஒன்றை இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அறிமுகப்படுத்தியது அப்போதைய ஆளும் தரப்பு. ஆனால் போதிய நிதி வசதி இன்றி அந்தத் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொருத்தமான பொறிமுறை ஒன்று உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் இலங்கையிலுள்ள யானைகளின் எண்ணிக்கையில் 70 சதவீதமானவற்றை இழக்க நேரிடும் என்று வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்டுள்ள யானைகளின் இழப்பு என்பது நாளொன்றுக்கு ஒரு யானை என்கிற ரீதியில் இருக்கின்றது. இலங்கையில் மொத்தமாகவே 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையான யானைகளே இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு ஒரு யானை என்கிற ரீதியில் தொடர்ந்தால், இன்னும் சில ஆண்டுகளிலேயே யானைகளின் குடித்தொகையை நாம் இழந்துவிடுவோம். பின்னர் காடுகளின் பன்முகத்தன்மையையும் இழக்கவேண்டி இருக்கும். அதன் தொடர்ச்சியாக ஒட்டுமொத்த சமநிலையும் பாதிப்படையும்.

இந்த நிலைமைகளைத் தடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். ஆட்சியாளர்களின் மேலதிகக் கவனம் இதில் செலுத்தப்படுவது அவசரம்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நிராகரிக்கப்படவேண்டிய ஒன்று

## கிண்ணியா சபை முன்னாள் தலைவர் தெரிவிப்பு

(ஹஸ்பர்)

நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிராகரிக்கப்பட வேண்டும் என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன செயலாளருமான எம். எம். மஹ்தி கோரிக்கை விடுத்தார்.

கிண்ணியாவில் உள்ள திருகோணமலையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் ஏன் கொண்டு வரப்பட இருக்கின்றது? இதனால் இந்த நாட்டிற்கு ஏற்படப் போகின்ற நன்மைகள் என்ன?

நாட்டிலே பயங்கரவாதம் என்ற ஒன்று இல்லாதபோது இவ்வாறான ஒரு மசோதா அவசியம்

அற்றது. அதனால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஏப்ரல் 21 ஈஸ்டர் தற்கொலைதாக்குதலுக்காக கைது




செய்யப்பட்ட எத்தனையோ முஸ்லிம் தலைமைகளும் அறிஞர்களும் இத்தகைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாக கைது செய்யப்பட்டுதற்போதும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான கைதுகளினால் இந்த நாடு கண்டுகொண்ட நன்மைகள் எதுவுமே இல்லை. மாறாக அரசியல் இலாபங்களையே பெற்றுக் கொண்டார்கள்.

பொருளாதாரத்தால் பாதாளத்தில் வீழ்ந்த இந்த நாட்டை பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வந்து சவாலுக்கு உட்படுத்தாமல் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

# சிறி சபாரத்தினத்தின் நினைவேந்தல் இன்று

## யாழ்ப்பாணம், மன்னாரில் இடம்பெற்றது

ரெலோ அமைப்பின் நிறுவுனத் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் நினைவேந்தப்பட்டது.

சிறி சபாரத்தினம் கொல்லப்பட்டார் என்று கூறப்படும் யாழ்ப்பாணம், கோண்டாவில் அன்னங்கை பகுதியில் உள்ள தோட்டக் காணியில் இந்த ரெலோ அமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்ட நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. .

பொதுச் சுடரை ஏற்றி, சிறி சபாரத்தினத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து



அஞ்சலி செலுத்தினார் செல்வம் அடைக்கலநாதன்.

அமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம், ரெலோ உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து கட்சியின் சார்பில் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. இதில் ஊடகவி-யலாளர் குகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மன்னாரில் உள்ள ரெலோ அலுவலகத்தில் அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி. மோகன் ராஜ் தலைமையில் இந்த நினைவஞ்சலி இடம் பெற்றது. அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் உயிர் நீத்த போராளிகள், பொது மக்களை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

# யாழ்ப்பாணத் தமிழர்களை இனி முன்னணியால் ஏமாற்ற முடியாது

## சொல்கிறார் ரெலோ பேச்சாளர் சுரேந்திரன்

யாழ்ப்பாண தமிழ் மக்களை இனியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏமாற்ற முடியாது என ரெலோ அமைப்பின் பேச்சாளர் குரு சாமி சுரேந்திரன் தெரிவித்தார்

ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரைய-ாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் மிகப்பெரிய ஒரு முழு அடைப்பு போராட்டத்தினை வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் நடாத்தினோம். தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் ஆதரவோடு முதற்தடவையாக அப்படியொரு பெரும் போராட்டத்தை நடத்திக் காட்டி இருந்தோம்

எதற்காக அதனை செய்திருந்தோம் என்பதை அறியாத ஒரு தரப்பான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அந்த அடைப்புப் போராட்டத்தைப் புறக்கணித்தார்கள். தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக நடத்திய அந்தப் போராட்டத்தை எள்ளி நகையாடினார்கள். தமிழ் மக்களின் உணர்வினை எள்ளி நகையாடினார்கள். அதனுடைய விளைவையே அவர்கள் இன்று அனுபவிக்கிறார்கள்.

இன்று தையிட்டியில் விகாரை கட்டி முடிந்து கலசம் வைத்த பின் விகாரையினை இடித்துவிடப்



போகின்றோம் எனத் தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள்

ஏற்கனவே நாவற்குழி, ஜம்புகோளப் பட்டணம், குருந்தூர் மலையில் விகாரைகள் புதிதாக உருவாக்கப்பட்டன அத்தோடு கலாசார சின்னங்கள் அழித்தொழிக்கப்படுகின்றன ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் இருப்பு அழித்தொழிக்கப் படுகிறது. இதற்கு எதிராக எமது கண்டனத் திணைப்பதிவு செய்வதற்காக, சர்வதேச அரங்கிற்கு வெளிப்படுத்துவதற்காக, நாங்கள் ஒட்டுமொத்தமாக இந்தக் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினோம்.

அதனை எள்ளி நகையாடி அந்தப் போராட்டத்தின் மீது அவதூறு பரப்பிக் கொண்டிருந்தவர்கள் இன்று தையிட்டியிலே கட்டி முடித்துக் கலசம் வைக்கப்பட்டிருக்கும் விகாரையினை அகற்றுவற்கு நாங்கள் போராடுகின்றோம் என மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்

நாளை சாவகச்சேரியில் நெடுங்கேணியில் விகாரை வரும் எல்லா இடங்களிலும் வரும் இவ்வாறு தனித் தனியே போராட போகின்றோமா அல்லது மக்களை ஒரு தேசமாக ஒருங்கிணைத்து இவற்றைத் தடுத்து நிறுத்த போகின்றோமா என்பதுதான் எமது கேள்வி

தமிழ்மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் மக்கள் இவ்வாறான ஏமாற்று அரசியல் செய்பவர்களை முற்று முழு தாக நிராகரிக்கவேண்டும்

சரியான தலைமையினை தெரிவு செய்-யவேண்டும், தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்கக்கூடிய தலைவர்களை அடையாளம் காணவேண்டும் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபடுவோருக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றார்,

